
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இப்பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	ரூ. 10
ஆயுள் சந்தா	ரூ. 125
தனிப் பிரதி	ரூ. 1

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க் கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப் படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களை யாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு :

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஆசிரியர் 'அண்ணு' உரை எழுதிய எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை, பொழிப்புரைகளும்
விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன.

I. உபநிஷதங்கள்	ரூ.	பை
ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	5	00
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)		
காலிகோ	2	50
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்ருவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி) பக்கம் 146	5	00
II. பகவத்கீதை		
ஸ்ரீமத் பகவத்கீதை	8	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது)	2	00
பக்கம் 223		
III. வேதாந்த ப்ரகரணம்		
IV. வேதநூல்களும் பிரயோகங்களும்		
ஸ்ரீ ருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத்துடன்-பக்கம் 296)	6	50
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	6	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	2	50
ஷை இரண்டாம் பாகம்	3	00
ஸ்ரீதேவிமாஹாத்மியம்	9	00
,, அட்டை பைண்டு	12	00
ஸ்ரீதேவிமாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	2	00
தேவி ஸ்தோத்திரம்	2	50
உபநயனம்	3	00
காலிகோ	5	00

	ரூ.	பை
குருகீதை	3	25
நாரத பக்தி சூத்திரங்கள்	1	75
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	2	00
,, காலிகோ	4	00
,, ,, (நாகரம்-தமிழ்)	4	00
தேவீஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம்		
,, (நாகரம்)	4	50
காலிகோ	6	00
V. புராணங்கள்		
ஸ்ரீமத் பாகவத ஸாரம் : முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) பக்கம் 560	12	50
ஸ்ரீதேவி பாகவத ஸாரம்	(அச்சில்)	
VI. ஸ்தோத்தரங்கள்		
ஸௌந்தர்யலஹரி பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரி (மூலம்) (நாகரம்-தமிழ்)	1	50
சிவானந்தலஹரி பாஷ்யம்	4	00
(மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	3	00
,, ,, மூலம்	1	50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீ வித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	7	00
,, ,, ஸ்தோத்ரம்	3	00
(பாராயணத்திற்குரியது)	1	00
ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்திரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம் (பக்கம் 271)	4	50
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	0	50

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை — 600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—59 || ஜுலை 1979 || இதழ்—7

பொருளடக்கம்

ஓர் அழைப்பு

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் சுமார் 200 ஊர்களில் பத்திரிகை விற்பனை யாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள், ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினால், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

சந்தாதாரர்களுக்கு

தங்களுக்குப் பிரதிகள் அனுப்பப்படுவது சம்பந்தமாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயத்திற்குக் கடிதம் எழுதிப் பதில் பெற விரும்பும் சந்தாதாரர்கள், தங்கள் கடிதத்துடன் போதிய தபால்தலைகளை இணைத்து அனுப்புவது நலம்.

தங்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் விலாசத்தைக் கவனமாகச் சரிபார்த்துக் குறை யிருந்தாலோ முகவரி மாற்றம் செய்துகொண்டாலோ உடனுக்குடன் தகவல் தெரிவியுங்கள்.

ஆங்கில மாதம் 15-ஆம் தேதி வரையிலும் தங்களுக்குப் பத்திரிகை வந்து சேராவிட்டால், கடிதம் எழுதிக் காரியாலயத்திற்குத் தகவல் தெரிவிக்கக் கோருகிறோம்.

சந்தாதாரர்களுக்குப் பிரத்தியேக வேண்டுகோள்

சந்தாக்களைப் புதுப்பித்துக்கொள்ள ஞாபகமூட்டுவதிலும் அவற்றைப் புதுப்பிப்பதிலும் செலவும் சிரமமும் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்கவே டிபாசிட் சந்தா முறையை ஏற்படுத்தியுள்ளோம். அன்பர்கள் டெபாசிட் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் பிறரைச் சேர்த்து உதவியும் விஜயத்தின் வளர்ச்சிக்கு துணைபுரியக் கோருகிறோம்.

மக்களுக்கு உணவு, உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்துற்கு வழிவகுத்து தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞான தானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசகர்கள் ஒவ்வொருவரையும், ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்கு மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத்தரும்படி கோருகிறோம். தங்களைப் போன்று பலரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தைப் படித்துப் பயனுற இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது பெருநலன் தரும்.

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 10 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் 125 டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்து கொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூற்று இருபத்தைந்தையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

டெபாசிட் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், (கவிதைகள் அனுப்ப வேண்டாம்) மகான்களின் வாழ்க்கை நிகழ்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59	சித்தார்த்தி ௵ ஆடி ௴	இதழ் 7



नान्या स्पृहा रघुपते हृदयेऽस्मदीये सत्यं वदामि च भवानखिलान्तरात्मा ।
भक्तिं प्रयच्छ रघुपुङ्गव निर्भरां मे कामादिदोषरहितं कुरु मानसं च ॥

நாந்யா ஸ்ப்ருஹா ரகுபதே ஹ்ருதயேஸ்மதீயே
ஸத்யம் வதாமி சபவாந் அகிலாந்தராத்மா |
பக்திம் ப்ரயச்ச ரகுபுங்கவ நிர்ப்பராம் மே
காமாதிதோஷரஹிதம் குரு மாநஸம் ச ||

—ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம்

ரகுகுல நாயகனே! என்னுடைய உள்ளத்தில் வேறு ஆசை இல்லை; உண்மையே சொல்கிறேன். நீ அனைவரின் உள்ளத்தில் உறையும் அந்தராத்மா. ரகுகுல சிரேஷ்டனே! உன்னைச் சரணடைந்து என் பாரத்தை நீக்கிக்கொள்ளும்படியான பக்தியை எனக்குக் கொடுத்தருள்வாய். மனதையும் காமம் முதலிய தோஷம் அற்றதாகச் செய்தருள்வாய்.

தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவுரை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

—திருமந்திரம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

ஞாயிறு, ஏப்ரல் 8, 1883

ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியில் ஆழ்ந்திருந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகு அவரது மனம் சாதாரண நிலைக்குத் திரும்பியது. அவர் தமக்குத் தாமே பேசிக்கொள்வதைப் போல ஏதோ முணு முணுத்துக்கொண்டிருந்தார். சமாதிநிலையில் எந்தப் பரம்பொருளைத் தரிசித்துக்கொண்டிருந்தாரோ, அதே பரம்பொருளுடன் இப்போது பேசுகிறாரா, என்ன? அவர் பேசிக்கொண்டிருந்ததில் இரண்டொரு வார்த்தைகள் மட்டும் அறையில் இருந்த பக்தர்களின் காதில் விழுந்தன. "நீயே நான், நானே நீ—நீ சாப்பிடு—நீயும்—நானும் சாப்பிடுவோம்! ......நீ ஏற்படுத்தியிருக்கும் இந்தக் குழப்பம் என்ன?"—இவ்விதம் குருதேவர் தமக்குத் தாமே ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

மேலும் அவர் தொடர்ந்து, "காமாலைக் கண்ணுடைய ஒருவனைப் போல நான் ஒவ்வொன்றையும் பார்க்கிறேன். கண்ணா! எளியோருக்குத் தோழனே! என் பிராணநாயகா! கோவிந்தா! இது என்ன குழப்பம்? எங்குப் பார்த்தாலும் நான் உன்னையே பார்க்கிறேனே!" என்று சொன்னார்.

'என் பிராணநாயகா! கோவிந்தா!' என்று சொல்லச் சொல்ல மீண்டும் அவர் சமாதியில் லயித்துவிட்டார். அறையிலே முழு மௌனம் குடிகொண்டிருந்தது. பக்தர்களின் கண்கள் ஆவலோடும், எவ்வளவு பார்த்தாலும் திருப்தி அடையாத நிலையிலும், எல்லையற்ற மகாபாவனுமய மான தெய்விகப் புருஷராகிய ஸ்ரீராமகிருஷ்ணரின் மீது பதிந்திருந்தன.

குருதேவர் சமாதியில் ஆழ்ந்திருந்தார். அவர் சிறியகட்டிலின் மீது அமர்ந்திருந்தார். சுற்றிலும் பக்தர்கள் உட்கார்ந்திருந்தார்கள்

ஆதர்சேன் தமது நண்பர்கள் பலரோடு வந்திருந்தார். அவர் முன்பு டெபுடி மாஜிஸ்திரேட் உத்தியோகத்தில் இருந்தவர். இப்போது அவர் இரண்டாம் முறையாக ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க வந்திருக்கிறார். ஆதர்சேனுக்கு இருபத்தொன்பது அல்லது முப்பது வயது இருக்கும். அவருடன் அவரது நண்பர் சாரதாசரண் என்பவரும் வந்திருந்தார். அந்த நண்பர் தமது மூத்த மகன் இறந்துவிட்டபடியால் அளவு கடந்த துன்பத்திற்கு ஆளாகியிருந்தார். 'பள்ளிக்கூட உதவி மேற்பார்வையாளர் (Deputy Inspector of Schools) உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்த சாரதா சரணர் தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தார். மூத்த மகனை இழந்த பிறகு எந்த விதத்திலும் அவருக்கு மன ஆறுதல் ஏற்படவில்லை. ஆகவே ஆதர்சேன் அவரிடம் குருதேவரைப் பற்றித் தெரிவித்து, அவரது வேதனை மிக்க உள்ளத்திற்கு ஆறுதல் தருவதற்காகவே இப்போது அவரைக் குருதேவரிடம் அழைத்து வந்திருந்தார். அதோடு ஆதர்சேனுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்கும் ஆவல் ஏற்பட்டிருந்தது.

குருதேவரின் சமாதி கலைந்தது. அவர் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தார். அறை முழுவதும் நிறைந்திருந்த பக்தர்கள் ஸ்ரீகுருதேவரையே பார்த்த படி உட்கார்ந்திருந்தனர். இன்னும் மனம் அகமுகப் பட்ட நிலையில் அவர் தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்தார். இறைவனே ஸ்ரீராமகிருஷ்ணரின் மூலமாகப் பேசுகிறாரோ, அல்லது உபதேசம் அளிக்கிறாரோ!

குருதேவர் பக்தர்களை நோக்கிப் பேச ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: உலகப் பற்றுள்ள மக்களிடம் அபூர்வமாகச் சில வேளைகளில் மட்டும் ஞானம் காணப்படும். அது ஒரு தீபத்தின் சுடரைப் போன்றது. அதுவன்று, சூரியனுடைய ஒரு

கிரணம் போன்றது அது. அதாவது சுவரில் ஒரு சிறிய இடுக்கின் வழியாக உள்ளே பிரவேசிக்கும் சூரியனது ஒரே கதிரைப் போன்றது அது என்று சொல்லலாம்.

உலகப் பற்றுள்ளவர்கள் கடவுளின் நாமத்தை ஓதுகிறார்கள். ஆனால் அதில் பக்தியின் மணம் கமழ்வதில்லை. குழந்தைகள் தம் அத்தைமார்கள் சண்டையிடுவதைக் கவனித்துச் சில வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, 'சுவாமி சாட்சியாகச் சொல்கிறேன்' என்று சொல்லிச் சத்தியம் செய்வதைப் போன்றது அது.

உலக ஆசையுள்ள மக்களிடம் உறுதி கிடையாது. ஒரு காரியத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தால், மிகவும் சரி; வெற்றி கிடைக்காவிட்டால் சிறிதுகூட அவர்கள் வருத்தமடைவதில்லை. நடந்தால் நடக்கட்டும், நடக்காவிட்டால் நடக்காமல் போகட்டும் என்று அவர்கள் இருப்பார்கள். தண்ணீருக்கு அவசியம் ஏற்படும்போது கிணறு தோண்டுவார்கள். தோண்டிக்கொண்டிருக்கும்போது கற்பாறை குறுக்கிட்டால் அந்த இடத்தில் தோண்டுவதையே விட்டு விடுவார்கள். பிறகு வேறோர் இடத்தில் தோண்ட ஆரம்பிப்பார்கள். அந்த இடம் மணற்பாங்கான இடமாக இருக்கும். எனவே அதையும் விட்டு மூன்றாவதாக இன்னும் ஓர் இடத்திற்குப் போவர். அப்படிச் செய்யாமல், முதலில் எங்கே கிணறு வெட்ட ஆரம்பித்தார்களோ அதே இடத்திலேயே தொடர்ந்து தோண்ட வேண்டும். அப்போது தான் தண்ணீர் கிடைக்கும்.

ஒருவன் தன் பழைய வினைகளுக்கு ஏற்பவே பலனையும் அனுபவிக்கிறான். இந்தக் கருத்தை ஒரு பாடல் சொல்கிறது:

"ஓ ஜகன்மாதா! நான் ஒருவரையும் குறை சொல்வதற்கில்லை;
ஐயோ! நானே தோண்டிய கிணற்றில் நான் மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.',

'நான்', 'என்னுடையது' என்பது அஞ்ஞானம். ஆராய்ந்தறிய (விசாரம் செய்ய) முற்பட்டால் எதை 'நான், நான்' என்று சொல்கிறாயோ, அது ஆத்மாவே தவிர வேறொன்றுமில்லை என்பதைக் காண்பாய். நீ உடலா, எலும்பா, மாமிசமா, அல்லது வேறு ஏதாயினுமா என்று ஆழ்ந்து ஆராய்ச்சி (விசாரம்) செய்து பார். அப்படி நீ ஆராய்ந்து பார்த்தால் முடிவில், நீ உடலும் அல்ல, எலும்பும் அல்ல, மாமிசமும் அல்ல, வேறு எதுவுங் கூட அல்ல என்பதை உணர்வாய். உனக்கு எந்த விதமான உபாதியும் கிடையாது. எல்லா விதமான உபாதிகளிலிருந்தும் நீ விடுபட்டவன். அந்த நிலையில், 'நான் எதையும் செய்வதற்கோ செய்யாமல் விடுவதற்கோ கர்த்தாவாக இல்லை; என்னிடம் குணமும் இல்லை, குற்றமும் இல்லை; எனக்குப் பாவமும் இல்லை, புண்ணியமும் இல்லை' என்பதை நீ உணர்ந்துகொள்வாய்.

அஞ்ஞானத்தில் உள்ள ஒருவன், 'இது தங்கம், இது பித்தளை' என்று சொல்கிறான். ஆனால் ஞானியோ 'இது எல்லாமே தங்கம்' என்று சொல்கிறான்.

கடவுளின் தரிசனம் கிடைத்த பிறகு விசாரம் செய்வது நின்று போகிறது. ஆனால் கடவுள் தரிசனம் பெற்ற பிறகும் விசாரம் செய்பவர்களாகச் சிலர் இருப்பதைப் பார்க்கலாம். மற்றும் சிலர் கடவுளைத் தரிசித்த பிறகும் பக்தி ததும்ப இறைவனின் பெயரையும் புகழையும் பாடியபடி இருப்பார்கள்.

குழந்தை எது வரையில் அழுதுகொண்டிருக்கும்? தாயிடம் பால் குடிக்க ஆரம்பிக்காத வரையில்தான் அழுதுகொண்டிருக்கும். பால் குடிக்க ஆரம்பித்ததும் அழுகை நின்றுவிடுகிறது. பிறகு ஒரே மகிழ்ச்சிதான். மகிழ்ச்சியுடன் தாயிடம் பால் குடிக்கிறது. ஆனால் ஒன்று சொல்ல வேண்டும்: பால் குடிக்கும்போது இடையிடையே குழந்தை விளையாடுவதும் உண்டு, சிரிப்பதும் உண்டு.

கடவுள்தாம் எல்லாமுமாக ஆகியிருக்கிறார். ஆனால் மனிதனிடமே அவர் விசேஷமாகப் பிரகாசிக்கிறார். குழந்தையின் தூய உள்ளத்துடன் தெய்விகப் பரவசத்தில் சிரிக்கவும் அழவும் ஆடவும் பாடவும் செய்பவனிடம் கடவுள் பிரத்தியட்சமாக இருக்கிறார்.

குருதேவர் ஆதர்சேனிடம் நலம் விசாரித்தார். ஆதர்சேன் தமது நண்பருடைய துயரத்தின் காரணத்தைக் குருதேவரிடம் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: உன்னால் என்ன செய்ய முடியும்? மரணத்திற்குத் தயாராக இரு. யமன் வீட்டிற்குள் புகுந்துவிட்டான். இறைவனின் தூய நாமம் என்ற ஆயுதத்தைக் கொண்டு அவனுடன் நீ போரிட வேண்டும். கடவுள்தாம் கர்த்தாவாக இருக்கிறார். 'இறைவா, நீ என் மூலம் செய்கிறபடி நான் செய்கிறேன். நீ என் மூலம் பேசுகிறபடியே நான் பேசுகிறேன். நான் யந்திரம், நீ யந்திரத்தை இயக்குபவன்; நான் வீடு, நீ வீட்டில் உறை

பவன்; நான் வண்டி, நீ வண்டியோட்டி' என்று நான் சொல்கிறேன்.

ஆண்டவனிடம் உனது வக்காலத்தைக் கொடுத்துவிடு. ஒருவரது பொறுப்புக்களை நல்லவர் ஒருவர் ஏற்றுக்கொள்ளும்படி இடம் கொடுப்பதால் துன்பம் விளையாது. இறைவனின் திருவுள்ளப்படியே நடக்கட்டும்.

மகன் ஆயிற்றே! மகனை இழந்த நீ வேதனைப் படுவது இயல்புதான். மகனை ஆத்மஜன் என்று சொல்வார்கள். தனக்குப் பிறந்தவன் அல்லவா தனயன்! ராவணன் வதைக்கப்பட்டுப் போர்க் களத்தில் விழ்ந்துவிட்டான். லட்சுமணன் ஓடிப் போய் அவனைப் பார்த்தான். என்ன பார்த்தான் தெரியுமா? ராவணனுடைய எலும்புகளில் துளைக்கப் படாத இடம் ஒன்றுகூடப் பாக்கி இல்லை. அதைக் கண்ட லட்சுமணன் ராமனிடம், "ராமா! உன் பாணத்தின் மகிமைதான் என்ன? ராவணனுடைய உடலில் துளைக்கப்படாத இடம் என்று ஒன்றுகூட வில்லையே!" என்று சொன்னான். ராமர் அதற்குப் பதிலாக, "தம்பி, ராவணனுடைய எலும்புகளில் நீ பார்க்கும் பொத்தல்களெல்லாம் பாணத்தால் ஏற்பட்டவை அல்ல. மகனை இழந்த சோகத்தால் ராவணனின் எலும்புகள் பிளந்து போயிருக்கின்றன. அவனது புத்திரசோகத்தின் சின்னங்களே அந்தத் துளைகள் ஆகும். மகனை இழந்த துன்பம் அவனை எலும்புவரை பாதித்துத் துளைத்திருக்கிறது" என்று சொல்லி விளக்கினார்

ஆனால் இவை எல்லாமே அநித்தியமானவை. வீடு, மனைவி, மக்கள்—யாவும் சதமில்லை (நிலை யற்றன); இரண்டொரு நாட்களுக்கு மட்டுமே இவை நிலைத்திருக்கும். பனைமரம் ஒன்று மட்டும் தான் உண்மை. இரண்டொரு பனம்பழங்கள் கீழே உதிர்ந்துவிட்டன. இதற்கு ஏன் வருத்தம் கொள்கிறாய்?

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களையும் ஈசன் செய்து வருகிறார். மரணத் தைத் தடுக்க முடியாது; அது நிச்சயம் வந்துதான் தீரும். பிரளய சமயத்தில் எல்லாம் அழிந்துவிடும். ஒன்றும் மிஞ்சியிருக்காது. அந்தச் சமயத்தில் அம்பிகை புதிய படைப்பிற்காக விதைகளைச் சேகரித்து வைப்பாள். படைப்புப் புதிதாகத் தொட ரும் காலத்தில் அவள் மறுபடியும் அவற்றைப் பயன் படுத்துவாள். வீட்டிலுள்ள பாட்டிமார்கள் ஒரு சட்டி யில் விதைகளைப் போட்டு வைப்பது போல அம்பி கையும் பிரளய காலத்தில் செய்கிறாள் (எல்லோரும் சிரித்தனர்). அந்தச் சட்டியில் வெள்ளரி விதை, கடல்நுரை, நீல உருண்டைகள் போன்றவை சிறிய சிறிய பொட்டலங்களில் இருக்கும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஆதர்சேனுடன் தமது அறை யின் வடகிழக்குத் தாழ்வாரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : (ஆதர்சேனைப் பார்த்து): நீ ஒரு டெபுடி மாஜிஸ்திரேட். உன்னுடைய இந்தப் பதவியும் கடவுள் கிருபையால்தான் உனக்குக் கிடைத்திருக்கிறது. ஆண்டவனை மறந்துவிடாதே. ஆனால் ஒன்றை நிச்சயமாக அறிந்துகொள்: எல்லோரும் கடைசியாக ஒரு நாள் ஒரே வழியில் தான் போயாக வேண்டும்.* நாம் இங்கு இந்த உலகத்தில் ஏதோ இரண்டொரு நாட்களுக்கு மட்டும்தான் தங்கியிருக்கப் போகிறோம்.

இந்தச் சம்சார உலகம் கர்மபூமி. இங்கே குறிப் பிட்ட சில கடமைகளை நமது பங்காகச் செய்யப் பிறந்திருக்கிறோம். கிராமத்தில் சொந்த வீடு வைத் திருக்கும் மக்கள் கல்கத்தாவுக்கு ஏதோ வேலையாக வருவதைப் போல, நாமும் சில கடமைகளைச் செய்து முடிப்பதற்காகவே இந்த உலகிற்கு வந்திருக்கிறோம்.

ஓரளவிற்குக் கர்மத்தில் நிச்சயம் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்வது நல்ல ஆத்ம சாதனையாகும். ஆனால் செய்ய வேண்டிய கர்மங்களை எல்லாம் நாம் விரைவில் செய்து முடித்துவிட வேண்டும். பொற்கொல்லன் பொன்னை உருக்கும்போது துருத்தி, விசிறி, ஊதுகுழல் எல்லா வற்றையும் பயன்படுத்திக் காற்றை உண்டாக்கு கிறான்; இவ்விதம் செய்வதனால் நெருப்பு மிகவும் நன்றாக எரிந்து விரைவில் பொன் உருகிவிடும். பொன் உருகிய பிறகு பொற்கொல்லன் ஓய்வு எடுத்துக்கொள்கிறான்; புகை குடிக்கிறான். அது வரையிலும் அவனுடைய நெற்றியிலிருந்து வேர்வை வழிந்தபடி இருக்கும். ஆனால் பொன் உருகிய பிறகோ நிம்மதியாகப் புகை குடிப்பான்.

ஒருவனிடம் திடமான மன உறுதி இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் ஆத்மசாதனை

(210-ம் பக்கம் பார்க்க)

---

* ஆதர்சேன் இந்த உரையாடல் நிகழ்ந்த பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு காலமானார். அவரது மறைவைக் கேட்ட குருதேவர் நீண்ட நேரம் ஜகன்மாதாவின் முன்பு அழுது புலம்பினார். குருதேவரின் பரம பக்தராக ஆதர்சேன் விளங்கினார். 'நீ என் உறவினன்' என்று குருதேவர் ஆதர்சேனிடம் சொல்வது வழக்கம்.

சுவாமி இராமகிருஷ்ணனந்தரின் போதனைகள்

நாம் முதலில் ஜடப்பொருளை நாடிப் பிறகுதான் சித்பொருளாகிய இறைவனை நாடுகிறோம். இந்த முறையை அறவே மாற்றியமைக்க வேண்டும். அதோடு நமது உள்ளத்திலுங்கூட எந்த விதச் சுய நல நோக்கமும் இடம் பெறக்கூடாது. கடவுளிட மிருந்து இந்த உலக சம்பந்தமான செல்வம் எதை யேனும் பெற வேண்டும் என்பதற்காக நாம் அவ ரிடம் அன்பு வைத்தோமானால், அந்த நிலையில் நாம் உண்மையில் அன்பு கொள்வது உலகத்திடமே தவிரக் கடவுளிடமல்ல. அப்போது நாம் ஒரு போதும் உண்மையான பக்தர்களாக இருக்க மாட்டோம். உண்மையான பக்தன் கடவுளிடம் அன்பு வைப்பது அந்த அன்பு தரும் இன்பத்திற் காகவே ஆகும். ஏனென்றால் பகவான் பிரேமை சொரூபியாக விளங்குகிறார்.

கடவுளின் சொரூபத்தை விளக்கும் சொற்களில் சிறந்து விளங்குவது ஆனந்தம் என்ற சொல்லா கும். ஒவ்வொருவனும் சச்சிதானந்தத்தையே இலட்சியமாகக் கொண்டு நாடிக்கொண்டிருக் கிறான். சச்சிதானந்தமோ அழியாத சித்பொருளா கவும், எல்லையற்ற ஞானசொரூபமாகவும், வரை யறையற்ற ஆனந்தமயமாகவும் விளங்கிக்கொண் டிருக்கிறது. எல்லோரும் எப்போதுமே உயிர் வாழ விரும்புகிறார்கள். எல்லா அறிவும் பெற்றிருக்க விரும்புகிறார்கள். அழியாத ஆனந்தத்தைப் பெற விரும்புகிறார்கள். ஆனால் எல்லா வாழ்க்கையாக வும் எல்லா அறிவாகவும் எல்லா ஆனந்தமாகவும் விளங்குகிறவர் கடவுளே ஆவார். எனவே ஒவ்வோர் உயிரும் உண்மையில் இறைவனையே இலட்சியமாகக் கொண்டு நாடிக்கொண்டிருக்கிறது

உலகிலுள்ள மக்களுள் பெரும்பாலானவர் கடவுள் அமர வேண்டிய சிம்மாதனத்தைத் தாங்கள் கவர்ந்து ஆக்கிரமித்துக்கொண்டிருக் கிறார்கள். பகவான் வீற்றிருக்க வேண்டிய அந்தச் சிம்மாதனத்தில், ஒன்றுக்குமே உதவாத ஓர் அடிமைக்கு இடம் அளித்திருக்கிறார்கள். இந்த அடிமைதான் அகங்காரம் எனப்படும். இந்த உண்மையை அறிந்ததும் அந்த அகங்காரத்தை நீ அடித்து விரட்ட வேண்டும். இதைச் செய்து நீ இறைவனின் தாசன் ஆகும்போது, உன்னுடைய அழியாத இயல்பு உனக்குத் தெரியவரும்.

கடவுளுடன் ஒன்றுபட்டிருந்தால் மரண பயம் அறவே நீங்கிவிடும்; மனதில் நிறைந்த அமைதி கிடைக்கும்; உண்மையான ஆனந்தத்தில் திளைக்க வும் இயலும்.



உயர்ந்த ஓர் இலட்சியத்தைப் பின்பற்றி நாம் செல்லாத வரையில், நம்முடைய அசுர இயல் பின் தூண்டுதல்களுக்கே பலியாகிவிடுவோம். ஒழுக்கமற்றவன் எல்லாவிதமான உலக ஆசை களுக்கும் அடிமையாகவே இருப்பான்.

மகாபுருஷர் ஒருவரைப் போற்றி வழிபடுவதன் அவசியத்தை எல்லா மதங்களுமே போதிக்கின்றன. மகாபுருஷர் என்று யாரைச் சொல்லலாம்? இறைவ னுடன் தாம் ஒன்றுபட்டிருப்பதை அனுபூதியில் உணர்ந்தவர் எவரோ, எவரிடம் ஆத்மஞானம் இருக்கிறதோ அவரே மகாபுருஷர் ஆவார். ஏனெனில் மதம் என்பது வெறும் பேச்சுக்கான விஷயமல்ல, வெறும் பாண்டித்தியம் அல்ல, வெறும் நம்பிக்கையுமல்ல; அது அனுபூதியில் உணர வேண்டிய விஷயம் மட்டுமே ஆகும். கடவுளை அனுபூதியில் உணர்ந்த ஒருவரே உண்மையான ஆசாரியர், உண்மையான குரு ஆவார். ஆகவே நாம் உண்மையான குரு ஒருவரைச் சார்ந்து, அவருடைய உதவியுடன் சிரவணம், சாஸ்திரங்களைக் கற்றுப் புரிந்து கொள்வது ஆகியவற்றைச் செய்து இறைவனை அனுபூதியில் உணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

அழியாத அமர வாழ்க்கையை அடைவதற்கு உரிய வழி புறத்தில் பகிர்முகமாகச் செல்வது அல்ல, மாறாக அந்தர்முகமாக உள்நோக்கிச் செல்வதே ஆகும். நம்முடைய எல்லாச் சக்திகளையும் ஒன்று சேர்த்து அவற்றை அந்தர்முகமாகச் செலுத்த வேண்டும்.

பல பிறவிகளாக நாம் இந்த ஸ்தூல உடலையே கடவுள் போலப் போற்றி வழிபட்டு வந்திருக்கிறோம். ஆகவே உண்மையான கடவுளை இப்போது உடனுக்குடனே போற்றி வழிபட இயலாத நிலையில் இருக்கிறோம். நாம் ஆத்மஞானம் பெற விரும்பினால் 'உடலே நான்' என்ற தேகாத்ம புத்தியைச் சிலுவையில் அறைந்து ஒழிக்கவும், புலன்களை அடக்கவும் வேண்டும்.

நாம் புற உலகத்தோடும் நமது உடலோடும் நம்மை நாம் ஐக்கியப்படுத்திக்கொண்டு காலமெல்லாம் வாழ்ந்திருக்கிறோம். இது காரணமாக மத உண்மைகளை அடியோடு மறந்துவிட்டோம். இந்த நிலையில் அனுபூதிமான்கள் கண்ட ஆன்மிக உண்மைகள்தாம் நம்முடைய உண்மை நிலையை நமக்கு விளக்குகின்றன. அவையே அழியாத அமர வாழ்க்கைக்கு உரிய வாசலை நமக்குத் திறந்து வைக்கின்றன. அவையே மிருகங்களின் நிலைக்கு நாம் சென்றுவிடாத வகையில் நம்மைத் தடுத்து வைத்திருக்கின்றன. உருப்படியாக எதையுமே செய்து சாதிக்காமல், உண்பதும் உறங்குவதுமாக வாழும் வாழ்க்கை மிருக வாழ்க்கையைத் தவிர வேறு என்ன? நாம் யார், நாம் செய்ய வேண்டிய கடமை என்ன?-என்பனவற்றை இடையிடையே நமக்கு நினைவுபடுத்தி, இங்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை முற்றிலும் நாம் மறந்துவிடாமல் இருப்பதற்கு உதவுகிற ஏதோ ஒன்று நமக்கு இருக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தத் தேவையை அனுபூதிமான்கள் கண்ட ஆன்மிக உண்மைகளே நிறைவுசெய்கின்றன. ✻

208-ம் பக்கத் தொடர்ச்சி

களில் ஈடுபடுவது சாத்தியமாகும். திடமான பிரதிக்ஞை அவசியமாகும்.

கடவுளின் திருநாமம் என்ற விதையில் மகத்தான சக்தி இருக்கிறது. அது அவித்யையை அழித்து விடும். விதை எவ்வளவு சிறியது! அந்த விதையிலிருந்து வெளிவரும் முளை எவ்வளவு மென்மையானது! என்றாலும் அது கடினமான பூமியைப் பிளந்துகொண்டு வெளியே வருகிறது.


காம காஞ்சன ஆசைகளின் மத்தியில் ஒருவன் நீண்ட காலம் வாழ்ந்தால், அவன் மனம் அவற்றால் பெரிதும் சலிக்கப்பட்டுத் தடுமாறிவிடும். ஆனால் உலகைத் துறந்துவிட்ட சன்னியாசிகள் இது விஷயமாக அவ்வளவாகப் பயப்பட வேண்டியதில்லை. நல்ல சன்னியாசி ஒருவன் காம காஞ்சனங்களிலிருந்து விலகி வாழ்கிறான். ஆகவே ஆத்மசாதனைகளின் மூலம் அவன் எப்போதும் தன் மனதை இறைவனிடம் நிலைநிறுத்த முடியும்.

சதா சர்வகாலமும் கடவுளிடம் தங்கள் உள்ளத்தைச் செலுத்தக் கூடியவர்களே உண்மைச் சன்னியாசிகள் ஆவர். அவர்கள் தேனீயைப் போன்றவர்கள். தேனீ மலர்களின்மீது மட்டுமே அமரும்; தேனை மட்டுமே அருந்தும். உலகில் காம காஞ்சனங்களுக்கு மத்தியில் வாழ்பவர்கள் தங்கள் மனதைக் கடவுளை நோக்கிச் செலுத்தலாம்; ஆனால் சில சமயங்களில் அவர்களின் மனம் காம காஞ்சனத்தை நாடிப் போய்விடும். அவர்கள் சாதாரண விட்டு ஈயைப் போன்றவர்கள். அந்த ஈ தின்பண்டத்தின் மீதோ, புண்ணின் மீதோ, மலத்தின் மீதோகூட அமரும்.

எப்போதும் உன் மனதைக் கடவுளிடம் நிலைநிறுத்து. ஆரம்ப காலத்தில் அதன்பொருட்டு நீ கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும். பிறகு ஓய்வுக்கால ஊதியத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கலாம். ★

நீதியின் நிறைவே கடவுள். சுதந்திரமாகிய அமுதமே கடவுள்.

—வீ சாவர்க்கர்



உண்மையை அறிவது ஞானம். உண்மையை நம்புவது பக்தி. உண்மையாக நடப்பது மார்க்கம்,

—ஒரு ஞானி



துளசி ராமாயணம்

கங்கை நதி

துளசிதாசர் இயற்றிய ஒப்பற்ற நூல் 'ராமசரித மானஸ்'. பக்திமணம் கமழும் அந்த நூலைக் கங்கை நதியோடு ஒப்பிடலாம்.

கங்கை நதி எந்தவித வேற்றுமையும் பாராட்டாமல் அனைவருக்கும் நன்மை பயக்கிறது. படித்துப் பெயரும் புகழும் பெற்ற பெரிய பண்டிதனைக இருந்தாலும் சரி, அறவே கல்வியறிவற்ற பாமரனாக இருந்தாலும் சரி, கங்கையைப் பொறுத்த வரையில் எவ்விதப் பேதமும் கிடையாது. அது போலவேதான் துளசி ராமாயணமும், அனைவரின் பாவத்தையும் போக்கி அனைவருக்கும் ஆறுதல் அளிப்பதாகத் திகழ்கிறது. திரிவேணியில் நீராடுவது மிகவும் நல்ல புண்ணியச் செயல் ஆகும். அது போலவே செய்யுளால் ஆன திரிவேணியாக விளங்கும் துளசி ராமாயணத்தைப் படிப்பதும் மிகவும் நல்ல புண்ணியச் செயல் ஆகும்.

மந்தாகினி—மந்திர்

இந்துக்களாகிய நம்மிடையே முக்கியமாக இரண்டு பழக்கங்கள் இருந்து வருகின்றன. ஒன்று, புண்ணியம் பெறுவதற்காக மந்தாகினிக்கு (கங்கைக்கு)ச் சென்று நீராடுவது. மற்றொன்று, மந்திருக்கு (கோவிலுக்கு)ச் சென்று இறைவனை வழிபடுவது. இவற்றில் கங்கைக்குச் சென்று நீராடுவதைத் துளசி ராமாயணத்திற்கும், கோவிலுக்குச் சென்று வழிபடுவதை வால்மீகி ராமாயணத்திற்கும் ஒப்பிடலாம். 'ஏன் துளசி ராமாயணத்தை கங்கையோடு ஒப்பிட வேண்டும்; அதற்கு மட்டும் ஏன் அவ்வளவு பெரிய சிறப்பைத் தரவேண்டும்' என்று கேட்கலாம். பகீரதன் மந்தாகினியைப் பூமிக்குக் கொண்டு வந்த காலம் முதல் இன்று வரையிலும் அதில் நீராடுபவர்கள் ஒரே விதமான பயனைப் பெற்று வருகிறார்கள். கங்கையின் பெருக்கில் வேண்டுமானால் மாறுதல் இருக்கலாம்; ஆனால் அதில் நீராடுவதற்கு உரிய விதிமுறையிலோ நீராடினால் உண்டாகும் பலனிலோ எந்தவித மாற்றமும் கிடையாது.

கோவிலுக்குப் போவது என்பது மந்தாகினிக்குச் செல்வதைப் போல அவ்வளவு சுலபமான செயல் அல்ல. இரண்டிற்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு. ஒருவேளை கோவில்கள் காலவெள்ளத்தில் சிதைந்து சின்னபின்னமாகி இருக்குமிடமே தெரியாமல் கூட ஆகிவிடலாம். மேலும், கோவிலுக்குச் செல்பவர்கள் சில விதிமுறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும். முதலில் நீராட வேண்டும்; பிறகு சுத்தமான ஆடை உடுத்துத் திருநீறணிந்து, கோவில் எந்த நேரத்தில் திறந்திருக்கும் என்று தெரிந்துகொண்டு அந்த நேரத்தில் மட்டும்தான் கோவிலுக்குள் செல்ல முடியும். மந்தாகினிக்குச் செல்வதற்கு மேலே சொன்ன விதிமுறைகள் எவையும் இல்லை. யார் எப்போது நினைத்துக்கொண்டாலும் அந்த விநாடியே மந்தாகினிக்குச் சென்று நீராடலாம். கோவிலுக்குள் நுழைவதற்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும். அது போல எந்தவிதத் தகுதியோ கட்டுப்பாடோ மந்தாகினியில் நீராடச் செல்பவர்களுக்குத் தேவையில்லை.

தாயும் தந்தையும்

மந்தாகினி தாயைப் போன்றது; கோவில் தகப்பனாரைப் போன்றது. ஒரு குழந்தை தன் தந்தையின் மடியில் உட்கார விரும்பி அவர் அருகில் செல்கிறது. தகப்பனார் முதலில் குழந்தை சுத்தமான உடையுடன் அழுக்கு எதுவும் படாமல் இருக்கிறதா என்று பார்த்தபிறகே அந்தக் குழந்தையைத் தம்

மடிமீது உட்கார அனுமதிப்பார். இல்லாவிட்டால் சுத்தமான உடையணிந்த பிறகு வரச் சொல்லித் தாயிடம் அனுப்பிவிடுவார். ஆனால் தாய் அப்படியல்ல. முதலில் குழந்தையை வாரி அணைத்து வாஞ்சையுடன் முத்தமிடுகிறாள். பிறகுதான் குழந்தையின் உடலிலும் உடையிலும் உள்ள அழுக்கைக் கவனித்துச் சுத்தம் செய்வாள். ஆகவே தாயிடம் செல்வதற்கு எந்தவிதத் தகுதியும் வேண்டாம். ஆனால் தந்தையிடம் செல்வதற்குச் சில தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

இது போலவேதான் துளசிதாசரின் ராமரும் தாயைப் போன்று, தம்மை நாடி வரும் அன்பரின் தகுதியையோ குறைகளையோ பாராமல் அன்பு செலுத்தக்கூடியவராகத் திகழ்கிறார்.

துளசிதாசர் கூறும் நான்குவகை மக்கள்

துளசிதாசர் நான்கு வகையான மக்களை ராமபிரான் சந்தித்ததாகக் கூறுகிறார். அந்த நான்கு வகை மக்களும் நான்கு யோகங்களைப் பின்பற்றும் யோகிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகிறார்கள்.

1. ஞானி : விசுவாமித்திர முனிவர் தசரத மன்னரின் இரு குமாரர்களாகிய ராமரையும் லட்சுமணரையும் அழைத்துக்கொண்டு மிதிலைக்குச் செல்கிறார். அங்கு ஜனகர், முனிவரைத் தக்க முறையில் வரவேற்று உபசரித்துத் தக்க ஆசனமளித்தார். அவர் முனிவருடன் வந்திருக்கும் பேரெழில் பெற்ற இரு குமாரர்களையும் கண்டு பேச்சற்றுப் போகிறார். அவருக்குப் பேசவே வரவில்லை. முன்னுக்குப் பின் முரணாக அவர் விசுவாமித்திரரிடம், ''முனிகுல திலக்? நிருபகுல பாலக்?—முனிவரே, இவர்கள் இருவரும் முனிவர் குலத் திலகங்களா? அல்லது யாராவது ஓர் அரசனின் குலக்காவலர்களா?'' என்று கேட்கிறார். ஜனகருக்கு ராமரை யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல். ஜனகரோ வைராக்கியவான் (வைராகி). ஆகவே அவருக்கு உடலின் மீது பற்றுக் கிடையாது. உடலின் மீது பற்றில்லாத காரணத்தாலேயே அவர் விதேகர் எனப்படுகிறார்.

2. ராஜயோகி : ஸ்ரீஹனுமான் ரிசியமுக பர்வதத்தில் சுக்கிரீவனால் அனுப்பப்பட்டு ராமரைக் கண்டு வணங்குகிறார். அந்தண வேடத்தில் வந்துள்ள ஹனுமானுக்கு ராமர் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் மேலிடுகிறது. எனவே நேரிடையாகவே ராமரிடம், ''நீங்கள் யார்?'' என்று கேட்டுவிடுகிறார். யோகிகள் சுய முயற்சியால் தியானம் பழகித் தாமே ஆத்மாவை உணர்ந்து கொள்கிறார்கள். அது போலவே அனுமனும் நேரிலேயே பரமனைக் கேட்டுவிடுகிறார்.

3. கர்மயோகி : வயது முதிர்ந்த பெரியவர்கள் வனவாசத்திற்குச் செல்லும் ராமரையும் லட்சுமணரையும் பார்க்கிறார்கள். இவர்கள் கர்மயோகிகள். வைராக்கியமே இவர்களுடைய சிறந்த மார்க்கமாக விளங்குகிறது. எனவே இவர்கள் வைராக்கியத்தின் திருவுருவமாக விளங்கும் லட்சுமணனை அணுகி ராமரைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்கள்.

4. பக்தர்கள் : கிராமப்புறத்தில் வாழும் பெண்மணிகள் ராமர், சீதை, லட்சுமணன் ஆகிய மூவரையும் வனம் செல்லும் வழியில் காண்கின்றனர். அந்தப் பெண்மணிகளுக்குக் கல்வியறிவு கிடையாது; புத்திக் கூர்மையும் கிடையாது. ஆனால் நிரம்பப் பக்தி உண்டு. எனவே இந்தப் பெண்மணிகள் சீதையை அணுகி வினவுகின்றனர். அவர்களிடம் கபடு கிடையாது; என்றாலும் சீதையை அணுகிக் கேட்பதற்குத் தயங்குகிறார்கள். முடிவில், சீதையுடன் வந்துகொண்டிருப்பவர்கள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவலால் உந்தப்பெற்று அவர்கள் சீதையைப் பார்த்து, ''நாங்கள் காட்டுவாசிகள். தங்களுடன் வரும் இந்த இரண்டு அரசகுமாரர்களும் அற்புத அழகுடன் திகழ்கிறார்கள். இளம் வயதுடையவர்களாகவும் காண்கிறார்கள். சரத்காலச் சந்திரனைப் போன்ற அழகுடன், சரத்காலத் தாமரைமலர் போன்று காணப்படும் இவர்கள் இருவரும் யார்?'' என்று அன்பின் திருவுருவமான சீதாபிராட்டியிடம் கேட்கின்றனர்.

ராமர், சீதை, லட்சுமணன் ஆகிய மூவரும் ஞானம், பக்தி, வைராக்கியம் ஆகிய மூன்றும் உருவம் பெற்று வந்தவர்கள் போன்று விளங்குகின்றனர் என்று துளசிதாசர் விளக்குகிறார்.

பாரபட்சம் உடையவர்

'ராமர் எனக்குச் சொந்தமானவர்' என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். அப்படியானால் அவர் நிச்சயம் பாரபட்சமற்றவராகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் துளசிதாசர் தம்முடைய ராமர் பட்சபாதம் உடையவர் என்று சொல்லுகிறார். அவ்விதம் தாம் சொல்வதற்கு ஒரு விளக்கமும் அவர் தருகிறார் : ''ராமபிரானின் பாரபட்சமில்லாத தன்மை அவரிடம் ஒருவகை மரியாதை மனப்பான்மையை நமக்குத் தோற்றுவித்துவிடும். அப்போது அவ்வளவு எளிதில் அவரை நாம் அணுக முடியாது. எல்லோரிடமும் ஒன்றுபோலவே நடந்துகொள்

பவரிடம் நாம் எப்படிச் சுலபமாக அணுக முடியும்? எனவே பட்சபாதத்துடன் நமக்கு மட்டுமே அவர் சொந்தமாக இருக்கிறார் என்னும்போது அவரைச் சுலபமாக அடைந்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றும். எனவே என்னுடைய ராமர் 'எனக்கு மட்டுமே சொந்தமானவர்தாம், என்னிடம் மட்டுமே பிரத்தியேக அன்பு கொண்டவர்தாம்' என்று நினைத்தே அவர் பட்சபாதமுடையவராகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினேன்'' என்கிறார் துளசிதாசர்.

ராமர் நம்மை வந்தடைவார்

ஜனகரின் அரண்மனையைச் சேர்ந்த பூங்காவில் அரசகுமாரர்களான ராமரும் லட்சுமணரும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே பல பறவைகள் இருக்கின்றன. சாதகம், சகோரம், கிளி, மயில் போன்ற எவ்வளவோ பறவைகள் இருந்தும் ராமர் அங்கிருந்த ஒரு மயிலிறகை எடுத்துத் தலையில் சொருகிக்கொண்டார்.

இந்தியில் 'மோர்' என்றால் மயில் என்றும், கவிதை மொழியில் என்னுடையது என்றும் பொருள் படும். 'மோர் பங்க்' என்றால் மயிலிறகு. 'மோர் பங்க்' சூடியிருக்கிறார் என்றால் மயிலிறகைச் சூடிக் கொண்டிருக்கிறார் என்றும், என்னுடைய இறகையே சூடிக்கொண்டிருக்கிறார் என்றும் இரண்டு பொருள் படும். இதனால் யாருடனும் எந்தவிதச் சண்டை சச்சரவுக்கும் இடமில்லாமல் போய்விடும். எல்லோரும் 'ராமர் என் பக்கம்தான் இருக்கிறார்' என்று சொல்வார்கள். ஆனால் துளசிதாசர் பாடுகிறார்: ''அனைவரும் என்னுடைய எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். ராமா! நீயாவது தயவுசெய்து என் பக்கம் இருக்க மாட்டாயா?''

மயில் தன்னுடைய இறகை உதிர்த்தால்தான் ராமர் அதை எடுத்துச் சூடிக்கொள்ள முடியும். அதுபோலவே மக்களும் 'நான், எனது' என்ற 'மோர்'-ஐ விட்டால்தான் ராமர் நம்மை வந்தடைவார் என்பதையே துளசிதாசர் இவ்விதம் விளக்கியுள்ளார்.

ஜனகபுரியில் நடந்தது

விசுவாமித்திர முனிவர் தசரதகுமாரர்களுடன் ஜனகரது தலைநகரமாகிய மிதிலையை அடைகிறார். பிரம்மரிஷியின் வருகையை அறிந்த ஜனகர் தமது முக்கிய அமைச்சர்கள் பிரதானிகள் புடைசூழச் சென்று முனிவரைத் தக்க மரியாதைகளுடன் அழைத்து வருகிறார். முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறார். பிறகு முனிவரைத் தக்க முறையில் வரவேற்று உபசரித்துச் சேவைகள் புரிகிறார்.

இதற்குள் அரண்மனை நந்தவனத்திற்கு உலாவச் சென்றிருந்த ராமரும் லட்சுமணரும் அந்த இடத்திற்கு வருகிறார்கள். ஒருவனின் நிறம் கறுப்பு, மற்றவனின் நிறம் வெள்ளை. அந்த இருவரையும் கண்டதும் அவையோருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் பேராச்சரியத்தையும் வர்ணிக்க முடியாது. அவையோர் எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர்.

விதேகர், ராமலட்சுமணர்களைப் பார்க்கிறார். விதேகநாட்டுக்கு அரசர் என்பதால் ஜனகருக்கு விதேகர் என்ற ஒரு பெயர் ஏற்பட்டது. மேலும் தமது உடலைப்பற்றிய நினைவே அவருக்கு இல்லாத காரணத்தாலும் மக்களால் விதேகர் என்று அழைக்கப்பட்டார். அவருக்கு அரசகுமாரர்களைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. உணர்ச்சி மேலீட்டால் முனிவரிடம் அவர், ''பிரம்மமே இவ்விதம் இரண்டு உருவங்கள் பெற்று இவர்களின் வடிவத்தில் வந்துவிட்டதா? இவர்கள் இருவரும் யார்?'' என்று கேட்கிறார்.

விசுவாமித்திரருக்கு ஜனகரின் கேள்வி சிரிப்பை உண்டுபண்ணுகிறது. முனிவர் சிரிக்கிறார். முனிவர் ஏன் சிரிக்க வேண்டும்? அவர் சிரித்ததற்குக் காரணம் இதுதான்: 'மிகப் பெரிய ஞானியான ஜனகரின் வார்த்தைகள் மகிழ்ச்சியில் நிறைந்திருக்கின்றன. பரப்பிரம்மத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் சமாதிநிலைக்குச் சென்றுவிடுகிறார். அவருக்குத் தம்முடைய உடலின் நினைவே இல்லை. அந்த நிலையில் அவருக்குப் பேச வேண்டிய முறையும் தெரியவில்லை, நாம் என்ன கூறினோம் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. ஆகவே அவர் முன்னுக்குப் பின் முரணாக 'முனிகுல திலக், நிருபகுல பாலக்' என்று சொல்கிறார். அவர் 'நிருபகுல பாலக்' என்று சொன்னதில் பாலகன் (पालक) என்பது காப்பவன் என்ற பொருளைத் தருகிறதே தவிரக் குழந்தை (बालक) என்ற பொருளைத் தரவில்லை.''

ஸூர்தாஸரும் கபீர்தாஸரும்

ஒருமுறை ஸூர்தாசரும் துளசிதாசரும் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். துளசிதாசர் ராமரின் பெருமைகளைச் சொல்லி, அவர் எப்படிப் பக்தர்களைக் காப்பாற்றுவார் என்பதை விளக்கிக் கொண்டிருந்தார். ஸூர்தாசர் மட்டும் என்ன சளைத்தவரா? அவரும் தமது பாலகிருஷ்ணனின் கோகுல

விலேகளையும், கண்ணன் பக்தவத்சலன் என்பதை யும் விளக்க ஆரம்பித்தார்.

அப்போது யாரோ, "ஐயோ! ஒரு மதயானை வரு கிறது!" என்று கூச்சலிட்டார்கள். அவ்வளவே தான்! சூர்தாசர் எழுந்து தலைதெறிக்க ஓட முற்பட் டார். அவரைத் துளசிதாசர் தடுத்து நிறுத்தி, "ஐயா, நீங்கள் ஏன் ஓடுகிறீர்கள்? உங்கள் கண்ணன் உங்களைக் காப்பாற்ற மாட்டானு? இதோ, என்னைப் பாருங்கள்; நான் உங்களைப் போல ஓடமாட்டேன்" என்ருர். ஸூர்தாசரோ அதற்குப் பதிலாக ஓடிக் கொண்டே, "துளசி! உன்னுடைய ராமரின் கையில் எப்போதும் வில்லும் அம்பும் இருந்துகொண்டே இருக்கும். அவன் பெரியவன். உன்னைக் காப் பாற்றிவிடுவான். ஆனுல் என்னுடைய கண்ணனே குழந்தை! அவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதற்கே யாராவது வேண்டும்" என்று கூறினர்.

இவ்விதம் பிரம்மத்தின் நிலையைத் துளசிதாசர் படம்பிடித்துக் காட்டிவிடுகிருர். வேதாந்தம் 'நேதி, நேதி' என்று சுட்டிக்காட்டும் பரம்பொருள் இன்று இரண்டு உருவங்களில், அதாவது ராமலட்சுமணர் களாக வந்திருப்பதாகக் கூறுகிருர். கருமைநிறம் மட்டுமல்ல, வெண்மைநிறமாகவும் பிரம்மம் இருக் கிறது என்பது போன்று ஜனகர் சொல்லுவதைக் கேட்டே விசுவாமித்திர முனிவர் சிரித்தார். பிரம்மமோ மனதிற்கு எட்டாத ஒன்று. ஞானியாகிய ஜனகர் பக்தர்களின் மொழியை உபயோகிக்கவே விசுவாமித்திர முனிவருக்குச் சிரிப்பு வந்தது.

ஞானமும் வைராக்கியமும் இரண்டு கண்கள்

அரக்கர்களின் குருவாக இருந்தவர் சுக்கிரா சாரியார். எம்பெருமான் வாமன அவதாரம் எடுத்து மூன்றடி மண்ணை யாசிக்க மகாபலியிடம் வருகிருர். இதை அறிந்த சுக்கிராசாரியார், மகா பலியிடம் வந்திருப்பது யார் என்பதை விளக்கி, அவன் தானம் கொடுப்பதைத் தடுக்கப் பார்க்கிருர். சுக்கிராசாரியார் சொல்வதை மகாபலி கேட்க வில்லை. ஆகவே சுக்கிராசாரியார் சிறிய வண்டின் உருவத்துடன் கமண்டலுவுக்குள் சென்று நீர் வராமல் தடுக்கவே தம்முடைய ஒரு கண்ணை இழந்து, ஒரு கண் குருடாகிவிடுகிருர்.

எல்லா உயிர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள இரண்டு கண்களில் ஒன்று ஞானமாகவும் மற் றென்று வைராக்கியமாகவும் திகழ்கிறது. சுக்கிரா சாரியார் மகாபலி தானம் அளிக்க முடியாதபடி தடுத்த காரணத்தால் பரமன் அவரது வைராக்கியம் என்னும் ஒரு கண்ணை அழித்துவிட்டார். ஆனுல் ஜனகரின் இரண்டு கண்களும் ஒன்று போலவே ராமபிரானைக் காண்கின்றன. எனவே அவர் பிரம் மத்தை உணர்ந்துகொண்டுவிடுகிருர்.

கிராமத்துப் பெண்கள்

கள்ளம்கபடமற்ற கிராமத்துப் பெண்மணிகள் ராமரைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் சீதையை அணுகுகிருர்கள். அவர் களின் மனதில் ராமர், லட்சுமணர், சீதை ஆகிய மூவரின் மீதும் எல்லையற்ற அன்பு—பக்தி காணப் படுகிறது. முதலில் அவர்கள் சீதையின் திருவடித் தாமரைகளில் பலமுறை வீழ்ந்து வணங்குகிருர்கள். பிறகு எழுந்து நின்று சீதையிடம், "நீ மகிழ்ச்சியுடன் உன் திருமண வாழ்க்கையை அனுபவிக்க வேண் டும்" என்று சொல்லி மனதார வாழ்த்துகிருர்கள்.

அந்தக் கிராமத்து பெண்கள் வாழ்த்துவதைக் கேட்டதும் ராமர் சீதையைப் பார்த்துப் பொருள் நிறைந்த புன்னகை புரிகிருர். ராமரின் பார்வை விளக்கும் விஷயம் இதுதான்: "ஜானகி! இத்தகைய அருமையான காட்சியை இந்த இடத்திலன்றி வேறு எங்கும் நீ காண முடியாது. அயோத்தியில் நீ அல்லவா அனைவரிடமும் சென்று வணங்கி ஆசிகள் பெற வேண்டும்? ஆனுல் இங்கோ இவர்கள் உன்னையும் வணங்கி, பிறகு நீண்ட நாட்கள் நீ சுமங்கலியாகக் கணவனுடன் வாழ வேண்டும் என்று ஆசி வேறு வழங்கு கிருர்கள். என்னே, அற்புதமான காட்சி!"

சீதை அயோத்தியில் வாழ்ந்தபோது, அவளை விட வயதில் சிறியவர்கள்தாம் சீதையை வணங்கு வார்கள். சீதையும் அவர்களை ஆசீர்வதிப்பது வழக்கம். பெரியவர்களைச் சீதை வணங்கும்போது, பெரியவர்கள் சீதைக்கு ஆசி வழங்குவார்கள். ஆனுல் இங்கு நடப்பது வேறு விதமாக அல்லவா இருக்கிறது! இந்தப் பெண்மணிகள் சீதையின் திரு வடிகளில் வணங்குகிருர்கள். பிறகு எழுந்து நின்று சீதைக்கு ஆசியும் கூறுகிருர்கள். இந்தக் காட்சியை அயோத்தியில் காண முடியாதல்லவா?

அந்தக் கிராமத்துப் பெண்கள், "எத்தனை காலம் வரையிலும் இந்தப் பூமியை ஆதிசேஷன் தலையில் தாங்குகிருனே, அத்தனை காலம் வரையிலும் நீ மகிழ்ச்சியுடன் உன் கணவனுடன் வாழ்வாயாக!" என்று சொல்லிச் சீதையை வாழ்த்தினுர்கள்.

ராமர் அவர்கள் வாழ்த்துவதைக் கொண்டே அவர்களின் மனநிலையைச் சீதைக்கு விளக்குகிருர்! "இந்தப் பாமர மக்கள் நம்மைப் பற்றி நன்கு


தெரிந்து வைத்திருக்கிறார்கள். பிரம்மமும் சக்தியும் சேர்ந்திருப்பது என்பது அமரத்துவம் வாய்ந்தது; என்றென்றும் அவை இணைபிரியாமல் இருக்கின்றன. எனவே அவர்களுக்கு நமது அவதார ரகசியம் தெரிந்துவிட்டது."

மேலும் அந்தப் பெண்கள் சொல்கிறார்கள்: "இந்த இரண்டு அரசகுமாரர்களும் மகிழ்ச்சியுடன் தாங்களாகவே இப் பூமியில் வந்து அவதரித்திருக்கிறார்கள். பிரமன் இவர்களைப் படைக்கவில்லை. இவர்களுக்குச் சரியான ஜோடியைப் படைக்கப் பிரமன் மிகுந்த சிரமப்பட வேண்டியதாயிற்று. தான் அவர்களைப் படைக்கவில்லையே என்ற பொறாமை காரணமாகத்தான் அந்தப் பிரம்ம தேவன் இவ்விதம் இவர்களைக் காட்டில் அலைய விட்டிருக்கிறான். எனவே நிச்சயமாக இவர்களைப் பிரமன் படைக்கவில்லை. மாறாக இவர்கள்தாம் அந்தப் பிரமனைப் படைத்திருக்கிறார்கள்.

☆

* ராய்பூர், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் கிளையைச் சேர்ந்த சுவாமி ஆத்மானந்தர் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவைத் தழுவி இந்த இதழின் விஜயதீபம் இடம் பெறுகிறது.

பயணக் கட்டுரை:



அயோத்தி யாத்திரை

காசியில் 8-4-79 முதல் 30-4-79 முடியத் தங்கியிருந்தேன். இடையில் 20-4-79 ஆம் நாள் அயோத்திக்குப் புறப்பட்டு 22-4-79 ஆம் நாள் திரும்பவும் காசிக்கு வந்தேன்.

20-ஆம் தேதி காசி மணிகர்ணிகா காட்டில் நீராடிவிட்டு, விச்வநாதர், அன்னபூரணியைத் தரிசித்துக்கொண்டு 'நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம்' சென்றிருந்தேன். அங்கே திரு வினைதீர்த்தான் செட்டியார் அவர்களைச் சந்தித்து அன்றைய தினம் நான் அயோத்தி செல்ல இருப்பதைத் தெரிவித்தேன். அவர், மூன்று நாட்களுக்கும் முன்னதாகவே அயோத்தியிலுள்ள நகரத்தார் சத்திரத்தில் நான் தங்குவதற்குக் கடிதம் கொடுத்திருந்தார்.

வாராணசி, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சேவாச்ரமத்தைச் சேர்ந்த சுவாமி ஒருவர் ஸ்டேஷனுக்கு வந்து என்னை தூன் எக்ஸ்பிரஸில் வழியனுப்பி வைத்தார். அன்று பகல் 11-20-க்குப் புறப்பட வேண்டிய ரெயில் 1-15-க்குத்தான் வாரணசியிலிருந்து புறப்பட்டது.

ஸ்ரீராமநவமிக்கு மறுநாள் (6-4-79) சித்திரகூடம் சென்றிருந்தேன். அதே மாதத்தில் அயோத்திக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவதார புருஷர்கள் பலர் இருந்தாலும், தேவ தேவியர் என்று பலர் இருந்தாலும் காசியில் முக்தியை வழங்கும்போது சிவபெருமான் இராம மந்திரத்தைத் தான் உபதேசிக்கிறாராம். இராம மந்திரம் ஒன்றை மட்டும்தான் தாரக மந்திரம், பிரம்மமந்திரம் என்று நம் முன்னோர் விசேஷமாகச் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். ஆண்டவனுக்கு எத்தனையோ நாமங்கள் இருக்கின்றன. ஆனால், 'இராமநாமம் ஒன்றுதான் உண்மை (ராம் நாம் ஸத் ஹை)' என்று காசியில் சடலத்தைத் தூக்கிச் செல்பவர்கள் சொல்வதைக் கேட்கலாம் என்றும், ராமாயண நிகழ்ச்சி சிலவும் ரெயில் அயோத்தியை அடையும் வரையிலும் என் மனதில் இருந்து வந்தன.

மாலை 5மணிக்கு ரெயில் அயோத்தியை அடைந்தது. அங்குப் பிளாட்பாரத்தில் சில வைணவச் சன்னியாசிகளைப் பார்த்தபோது, பிருந்தாவனத்திலும் இவர்களைப் போலவே வாழ்ந்து வரும் வைணவச் சன்னியாசிகளைப் பற்றிய நினைவுதான் எனக்குத் தோன்றியது. அங்கு முதன்முதலில் நான் பார்த்த சாதுவுக்கு 'ஓம் நமோ நாராயணா!' என்று சொல்லி, சாதுக்களின் முறையில் நமஸ்காரம் செய்தேன்.

டிக்கட் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது தலைக்கு மேலே எதிரிலிருந்த சுவரில் சீதையின் சுயம்வரம், பர்ணசாலையில் ராமரும் சீதையும் அமர்ந்திருக்க இலட்சுமணன் காவல் புரிவது, குதிரையைப் பிடித்த நிலையில் லவகுசர்கள் ஆகிய மூன்று வண்ணப் படங்களும் வரையப்பட்டிருப்பது தென்பட்டது. ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும்,

திரும்பிப் பார்த்தபோது, ஸ்டேஷனின் நுழை வாயிலில் சாதாரணமாக ஊரின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் புகழ்பெற்ற ராமர் பட்டா பிஷேக வண்ணப்படம் பெரிய அளவில் வரையப் பட்டிருப்பதைக் கண்டேன். மிகவும் பொருத்த மான அந்தப் படத்தை அந்த இடத்தில் பார்த்த போது மனதிற்கு மிகமிக ரம்மியமாக இருந்தது.

ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரரிடம், "நாட்கோட் சத்திரம்" என்று நான் சொல்லிக்கொண்டிருந்த போது, ஒரு குதிரை வண்டிக்காரர் என்னிடம் வந்து, "சுவாமிஜி, நீங்கள் அம்மாஜி மந்திர் போக வேண்டுமா? நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் போக வேண்டுமா?" என்று தமிழில் கேட்டார். அந்தக் குதிரை வண்டிக்காரருக்கு நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்பது எப்படித்தான் தெரிந்ததோ!

காசியிலுள்ள ஸ்ரீ காமகோடி சங்கர மடத்தில், "அயோத்தி செல்வதானால் அங்கு அம்மாஜி மந்திரிலுள்ள பார்த்தசாரதி ஐயங்காரிடம் சென்று தங்குங்கள்" என்று என்னிடம் சொல்லியிருந்தார் கள். ஆனால் நாட்டுக்கோட்டை சத்திரத்தில் தங்கும் ஏற்பாட்டுடனேயே நான் காசியிலிருந்து புறப் பட்டிருந்தேன்.

குதிரை வண்டிக்காரரிடம், "நாட்டுக்கோட்டை சத்திரம்தான் போகவேண்டும்" என்றேன். அவர், ரிக்ஷாக்காரரிடம் நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் உள்ள இடத்தை இந்தியில் விவரமாகத் தெரிவித்து என்னை வழியனுப்பி வைத்தார்.

ரிக்ஷாவில் சென்றபோது ஸ்டேஷனுக்கு மிக அருகிலேயே பஸ் நிலையமும், அதன் எதிரில் பிர்லா மந்திரும் பிர்லா தர்மசாலையும் இருப்பதைக் கண்டேன்.

5-20 க்கு ஒரு கட்டிடத்தின் முன்பு சைக்கிள் ரிக்ஷா நின்றது. நிமிர்ந்து பார்த்தபோது 'நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரம்' என்று தமிழிலும் அதன் கீழே ஆங்கிலத்திலும் இந்தியிலும் எழுதப் பட்டிருப்பது தெரிந்தது.

உள்ளே இருந்த ஹாலில் ராமர் சந்நிதிக்குச் சென்று விழுந்து வணங்கினேன்.

அங்குள்ள சத்திரத்தைக் கவனித்துக்கொள் வதற்காகக் கார்த்திகேயன் என்பவரை நகரத்தார் நியமித்திருக்கிறார்கள். அவரிடம், வினைதீர்த்தான் செட்டியார் என்னிடம் கொடுத்திருந்த அறிமுகக் கடிதத்தைக் கொடுத்தேன். கார்த்திகேயனுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவரைப் பற்றிய சில விவரங்கள் தெரிய வந்தன.

கார்த்திகேயனுக்கு வயது முப்பத்தொன்பது. அவர் தமது தாய், மனைவி, நான்கு குழந்தைகள் ஆகியோருடன் அங்கேயே வாழ்ந்து வருகிறார். அவருக்குப் பூர்விகம் குன்றக்குடி. குன்றக்குடி யிலிருந்து சிறிய வயதிலேயே கார்த்திகேயனை அவருடைய தந்தை கான்பூருக்கு அழைத்து வந்தாராம். அயோத்தியிலுள்ள நகரத்தார் சத்திரத்தைத் தமது மாமனார் முதலில் கவனித்து வந்ததாகவும், அவரது மறைவிற்குப் பிறகு அவர் பார்த்து வந்த வேலையைத் தாம் செய்து வருவதாக வும் கார்த்திகேயன் கூறினார். கடந்த பத்தொன்பது வருடங்களாகக் கார்த்திகேயன் அயோத்தியில் இருந்து வருகிறார்.

கார்த்திகேயன், "சரயு நதிக்கு இப்போது போக விரும்புகிறீர்களா? அல்லது நாளைக் காலையில் போகிறீர்களா?" என்று கேட்டார்.

"இன்றைக்கே போக முடிந்தால் நல்லதுதான்" என்று பதில் சொன்னேன்.

தாம் கவனிக்க வேண்டியிருந்த சில வேலை களைக் கவனித்து முடித்துவிட்டுக் கார்த்திகேயன் என்னுடன் சரயுநதிக்குக் கிளம்பினார்.

அயோத்தியிலுள்ள முக்கியச் சாலையின் பெயர் 'கோசுவாமி-துளசி மார்க்' என்பதாகும். அந்தச் சாலையிலேயே நகரத்தார் சத்திரம் அமைந்திருக் கிறது.

நதிக்குச் செல்லும் வழியில் சத்திரத்திற்கு மிக அருகிலேயே ஓர் அழகிய பூங்கா இருப்பதைக் கண்டேன். பூங்காவையும் அதன் நடுவிலிருந்த சிலையையும் சுட்டிக்காட்டி, "இது துளசி உத்தி யானம்; உள்ளே காணப்படும் சிலை துளசிதாச ருடையது" என்று கார்த்திகேயன் கூறினார்.

"சத்திரத்திற்கு வழி தெரியாவிட்டால் துளசி பார்க் என்று விசாரியுங்கள். அதன் அருகிலேதான் சத்திரம் இருக்கிறது" என்று காசியில் வினை தீர்த்தான் அவர்கள் கூறியது என் நினைவிற்கு வந்தது

வழியில் சாலையில் ஒரு டூரிஸ்ட் பஸ் நின்றிருந்தது அதிலிருந்த ஆண்களும் பெண்களும் 'ஸ்ரீ ராம் ஜய் ராம் ஜய் ஜய் ராம்' என்று சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தார்கள். இதே பாணியில்தான் சென்னையில் சுவாமி ஆத்மானந்தர் தமது துளசி

ர்மாயணத் தொடர் சொற்பொழிவுகளின்போது 'ஸ்ரீ ராம் ஜய் ராம் ஜய் ஜய் ராம்' என்று தாமும் பாடி, சொற்பொழிவு கேட்க வந்துள்ள அன்பர்களையும் பாடும்படிச் செய்வது வழக்கம். டூரிஸ்ட் பஸ்ஸில் நடைபெற்றுக்கொண்டிருந்த சங்கீர்த்தனம் சுவாமி ஆத்மானந்தரையே எனக்கு நினைவு படுத்தியது. அடுத்து, துளசிதாசர் பிறந்த இடத்தை ராஜப்பூரில் நான் சென்று பார்த்திருந்தது, காசியில் துளசிதாசர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றிருந்தது ஆகியவையும் என் நினைவிற்கு வந்தன. அவற்றை எல்லாம் கார்த்திகேயனிடம் தெரிவித்து, ''துளசி ராமாயணத்தின் சில பகுதிகளைக்காசியிலும், மற்றும் சில பகுதிகளை இங்கு அயோத்தியிலும் துளசிதாசர் எழுதினர்'' என்று சொல்லி முடித்தேன்.

துளசிமார்க்கில் சென்றுகொண்டிருந்தபோதே வடக்கு நோக்கிச் செல்லும் ஒரு திருப்பத்தை அடைந்தபோது நதி ஓடுவது தென்பட்டது.

''சத்திரத்திற்கு இவ்வளவு அருகில் சரயு இருக்கிறதே! சத்திரத்திலிருந்து நதி ஒன்றரை பர்லாங் இருக்குமா?'' என்று கார்த்திகேயனைக் கேட்டேன். ''இல்லை, ஒரு பர்லாங் தூரம்தான்'' என்றார் அவர்.

மேற்கிலிருந்து கிழக்காகச் சரயு நதி ஓடுகிறது. ஸ்ரீராமபிரான் சரயு நதியில் இறங்கித்தான் கடைசியாக மறைந்துபோனார் என்பது வரலாறு.

நதியில் நீர் மிகமிகத் தெளிவாக இருக்கிறது. அதிக ஆழம் இல்லாததால் நீந்தத் தெரியாதவர்களும் மார்பளவு ஆழத்தில் நின்று தாராளமாகக் குளிக்கலாம்.

பிரயாகையிலுள்ள திரிவேணி சங்கமத்திலும், காசியில் கங்கைக் கரையிலுள்ள ஏறத்தாழ எல்லா நீர்த்துறைகளிலும் பண்டாக்கள் பயன்படுத்தும் ஒரு வகையான மரக்கட்டில்களைப் பார்க்கிறோம். அதுபோலவே சரயு நதிக் கரையிலும் குறிப்பிட்ட ஓர் இடத்தில் பண்டாக்களின் மரக்கட்டில்கள் இருப்பதைப் பார்த்தேன். ஆனால் நாங்கள் அங்கே சென்றபோது மாலை ஆறு அல்லது ஆறேகால் இருக்குமாதலால், பண்டாக்களின் படையெடுப்பு அப்போது அறவே இல்லாமலிருந்தது.

அங்கிருந்த மரக்கட்டில்களில் ஒன்றில் கார்த்திகேயன் அமர்ந்துகொண்டு, ''நீங்கள் சத்திரத்திற்கு வருவதற்குச் சற்று முன்புதான் நான் இங்கு வந்து நீராடிவிட்டு வந்திருந்தேன்'' என்றார். அவரிடம் ஆடைகளை ஒப்படைத்துவிட்டு நதியில் இறங்கி நீராடினேன். நதியின் நீர் மிக்க சுவை பொருந்தியது.

நீராடி முடியும் தருவாயில் இருள்சூழ ஆரம்பித்துவிட்டது. நீராடிக்கொண்டிருந்தபோதே கரையில் சற்றுத் தொலைவில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது தெரிந்தது. கரையேறி வந்ததும் அந்த இடத்தைப் பற்றி விசாரித்தபோது ''மயானம்'' என்று கார்த்திகேயன் தெரிவித்தார்.

அவரிடம், ''சந்நியாசிகள் மயானத்தைக் கோவில் போலக் கருதுவார்கள். அங்கிருந்தே சிலர் தியானம் பழகுவதும் உண்டு'' என்று சொல்லிக்கொண்டே இருவருமாக மயானம் இருந்த இடத்தை அடைந்தோம்.

அங்கு ஒரு சடலம் எரிந்துகொண்டிருந்தது. தூரத்திலிருந்து நான் பார்த்த நெருப்பு அதுதான். மற்றொரு சடலத்தை வைத்துக் கட்டைகளை அதன்மீது அடுக்கிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சடலத்திற்கு நெருப்பு வைத்து அது நன்கு எரிய ஆரம்பிக்கும் வரையிலும் அங்கிருந்தோம். பிறகு சத்திரத்திற்குத் திரும்ப ஆரம்பித்தோம்.

வரும் வழியில், ''காசியில் மணிகர்ணிகா காட்டிலும் அரிச்சந்திர காட்டிலும் சடலங்கள் எரிவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?' என்று கார்த்திகேயன் கேட்டார்.

''ஒருமுறை அல்ல, பலமுறை அங்கே சென்றிருக்கிறேன். இதுவரையிலும் சுமார் 200 சடலங்கள் எரிக்கப்பட்டதை அருகிலிருந்து பார்த்தும் இருக்கிறேன்'' என்று பதில் சொன்னேன். மேற்கொண்டு கார்த்திகேயன் சொன்ன தகவல்கள் எனக்கு முற்றிலும் புதியவை. அவர், ''இங்கு அயோத்தியில் பிற எல்லா ஊர்களிலும் செய்வதைப் போலச் சடலத்தை எரிக்க ஆகும் கட்டைக்குப் பணம் கொடுத்தால் போதுமானது. ஆனால் காசியில் மணிகர்ணிகாவில் தகனம் செய்வதானால் கட்டைக்கு ஆகும் செலவைத் தவிரவும் அந்த இடத்தில் எரிப்பதற்காக இருபத்தாறு ரூபாய்கள் தர வேண்டுமாம். அதுபோலவே அரிச்சந்திர காட்டிலும் அங்கு எரிப்பதானால் கட்டைக்கு ஆகும் செலவைத் தவிரவும் ஐம்பத்தொரு ரூபாய் தர வேண்டுமாம். முன்பு இவ்விதம் இருபத்தொரு ரூபாய், ஐம்பத்தொரு ரூபாய் என்று இருந்தது; இப்போது இன்னும் கூடுதலாகவே ஆகியிருக்கும்'' என்று தெரிவித்தார்.

மணிகர்ணிகாவில் தகனம் செய்வதுதான் விசேஷமானது என்று நான் நினைத்திருந்தேன். அதைக் கார்த்திகேயனிடம் தெரிவித்தபோது அவர், ''அரிச்சந்திர காட்டில் தகனம் செய்வது

மணிகர்ணிகாவில் தகனம் செய்வதைவிட மிக்க விசேஷமானதாகக் கருதப்படுகிறது. அரிச்சந்திர மகாராஜாவே இருந்த இடம் என்பதுதான் அதற்குக் காரணம். மணிகர்ணிகாவில் ஒவ்வொரு நாளும் சுமார் 150 சடலங்கள் எரிகின்றன. அரிச்சந்திர காட்டிலோ பத்து சடலங்கள் எரிந்தாலே அதிகம். காசியில் இறந்துபோகிறவர்களில் பெரும்பாலோர் ஏழைகள். ஆகவே மணிகர்ணிகாவிலேயே எரித்து விடுகிறார்கள்'' என்றார்.

நான், ''தாம்ராஜாக்கள் என்று சொல்லப்படும் அரிச்சந்திர மகாராஜாவின் பரம்பரையினரின் ஆதிக்கத்தில்தான் இப்போதும் காசியிலுள்ள அந்த இரண்டு மயானங்களும் இருந்து வருகின்றன. அண்ணன் ஒரு மயானத்தையும், தம்பி மற்றொரு மயானத்தையும் நிர்வகித்து வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். தாங்கள் சொல்வது போல, காசியில் இறந்துபோகிறவர்களில் பெரும்பாலோர் ஏழைகள் என்பது உண்மைதான். காசியில் சடலங்களைக் கொண்டு வரும் முறையும் சரி, கொண்டு வருபவர்களையும் சரி, பார்க்கும்போதே ஏழைகள் என்பது தெரிந்துவிடுகிறது'' என்று சொன்னேன்.

''ஏழு மோட்சபுரிகளில் அயோத்தியும் ஒன்று இங்கு மரணமடைய வேண்டும் என்பதற்காகவே பலர் தங்களின் இறுதிக் காலத்தை இங்கு வந்து கழிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் வைணவர்களே ஆவர். ராமர் பிறந்த இடம் என்பதால், லக்னௌ, கான்பூர் மற்றும் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் சடலங்களை இங்குக் கொண்டு வந்து எரிக்கிறார்கள். சத்திரத்திலிருந்தே நீங்கள் பார்த்தால் ஒரு நாளைக்குத் துளசிமார்க்கில் ஐம்பது சடலங்கள் போவதைப் பார்க்கலாம்'' என்றார் கார்த்திகேயன்.

''அயோத்தியில் மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. பிருந்தாவனத்திலும் மதுராவிலும்கூட இப்படிப்பட்ட அமைதியைக் காண முடியாது. இமயமலைத் தொடரிலேயே அமைந்த ஹரித்துவார், ரிஷிகேஷ், உத்தரகாசியிலும்கூட ஆரவாரங்கள் உண்டு. காசியிலோ இந்த நேரத்தில் ஜன நெரிசல் மிகுந்திருக்கும்'' என்று சொன்னேன்.

பேசிக்கொண்டே சத்திரத்திற்குத் திரும்பினோம்.

'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி'யின் சார்பாகக் காசி, கல்கத்தா (காளிகாட்), தாரகேசுவரம், அலகாபாத் கயை, அயோத்தி, கோதாவரி, நாஸிக் பஞ்சவடி ஆகிய இடங்களில் சத்திரங்கள் இயங்கி வருகின்றன.

''முதலில் காசியில் சத்திரம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அடுத்து அயோத்தியில்தான் ஆரம்பிக்கப் பட்டது'' என்று விணதீர்த்தான் அவர்கள் என்னிடம் கூறியிருந்தார்கள்.

அயோத்தியில் சத்திரம் எப்போது ஆரம்பிக்கப் பட்டது என்பதைச் சத்திரத்துச் சுவரில் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள பின்வரும் வாசகங் களிலிருந்து அறிகிறோம்: ''பாண்டிய நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டி வைசிய நகரத்தார் ஸ்ரீ அயோத்யாபுரியில் ஸ்ரீராமபிரான் பிரதிஷ்டையும் அன்னதானச் சத்திர ஸ்தாபனமும் செய்யப்பட்டு நடந்து வருகிறது. சுபம். இங்கிலிஷ் தேதி 1883ஆம் வருஷம் செப்டம்பர் 2.''

சத்திரத்திலுள்ள சந்நிதியில் ராமர், சீதை லட்சுமணன், கைகளைக் கூப்பிய நிலையில் நிற்கும் ஆஞ்சநேயர் ஆகியோர் அருள் பாலிக்கிறார்கள். ராமருக்கு இங்குக் 'கோதண்டபாணிசுவாமி' என்று பெயர். பெயரைக் கேட்டவுடனே மதுராந்தகம் ஏரிகாத்த பெருமானின் நினைவுதான் வரும் சத்திரத்துச் சந்நிதியிலுள்ள அத்தனையும் கலையோடு கூடிய அற்புதமான பஞ்சலோக விக்கிரங்கள். தமிழ் நாட்டில் செய்யப்பட்ட விக்கிரங்கள் இவை என்று பார்த்தவுடனே தெரிந்துகொள்கிறோம். தமிழ் நாட்டிலுள்ள ராமர் கோயில்களில்கூட இவ்வளவு பெரிய விக்கிரகங்கள் இருப்பதாகத் தெரியவில்லை தமிழ்நாட்டில் ராமர் படம் வைத்து வணங்குவதைத் தான் பெரும்பாலும் பார்க்கிறோம். ராமருக்கு என்று அமைந்த தனிக் கோவில்கள் தமிழகத்தில் குறைவாகவே உள்ளன எனலாம்.

சத்திரத்தில் உள்ள ஸ்ரீராமபிரானின் விக்கிரகத்திற்குக் கீழே பல சாளக்கிராமச் சிலைகளைப் பார்க்கிறோம். சந்நிதி மேற்கு நோக்கி அமைந்திருக்கிறது. சந்நிதியின் வலப் புறத்தில் விநாயகரும் இடப்புறத்தில் நந்தியுடன் கூடிய சிவலிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சந்நிதியில் உள்ள இவற்றுக்கு எதிரில் பித்தளைச் சர விளக்குகள் அழகு செய்கின்றன.

காலை, பகல், இரவுநேரங்களில் சந்நிதியில் சிறு அளவில் பூஜையும் கர்ப்பூர ஆரதியும் நடைபெற்று வருகின்றன. கார்த்திகேயன்தாம் பூஜாரியாக இருந்து அவற்றைச் செய்து வருகிறார்.

இங்கே சத்திரத்தில் வருடத்தில் ஒருமுறை ஸ்ரீராம நவமியின்போதுதான் விசேஷம் என்றும், இந்த ஆண்டு ஸ்ரீராமநவமிக்கு (5-4-79) விணதீர்த்தான் செட்டியார் அவர்கள் வந்திருந்தார்கள் என்றும் கார்த்திகேயன் கூறினர்.

இரவு உணவுக்குப் பிறகு சத்திரத்தின் மாடியில் உறங்குவதற்குக் கார்த்திகேயன் எனக்கு ஏற்பாடு செய்து தந்தார். மாலை சாய்ந்ததுமே கிராமச் சூழ்நிலையை அயோத்தியில் முழுமையாக உணருகிறோம். அப்போது நிலவும் சூழ்நிலையை 'ஸ்ரீராம பிரானின் மணம் கமழும் சூழ்நிலை' என்றே சொல்லலாம்.

• • • •

மறுநாள் (21-4-79) காலையில் ஏழு மணிக்குச் சரயு நதியில் குளிப்பதற்காகச் சென்றேன். முதல் நாள் மாலையில் சென்றதால் யாத்திரிகர்களையோ பண்டாக்களையோ நான் காணவில்லை. இரண்டாவது முறையாக இப்போது பகலில் சென்றதால் சுமார் நூறு யாத்திரிகர்களை நதிக்கரையில் காண முடிந்தது. பிரயாகையில் காணப்படுவதைப் போலப் பண்டாக்களின் கொடிகளும் பல வண்ணங்களில் பறந்துகொண்டிருந்தன. யாத்திரிகர்கள் வரும் நேரம் என்பதால் பண்டாக்களும் கூடிவிடுகிறார்கள். பிரயாகை, காசி, கயை போன்ற இடங்களில் காணப்படுவதைப் போல் பிண்டம், பிராயச்சித்தம், கோதானம் போன்ற காட்சிகளைப் பண்டாக்கள் விமரிசையாக நடத்திக்கொண்டிருந்தார்கள். ஒரு கன்றுக்குட்டியின் வாலைப் பிடித்துக்கொண்டே பண்டா சொல்லும் சுலோகங்களை யாத்திரிகர் ஒருவர் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். யாத்திரிகர் பலர் ஆனந்தமாக நீராடிக்கொண்டிருந்தனர்.

நதியில் நீராடிவிட்டுச் சத்திரத்திற்குத் திரும்பி வரும்போது துளசி பூங்காவிற்குள் நுழைந்தேன். பூங்காவின் நடுவிலுள்ள மண்டபத்தில் துளசிதாசரின் உருவச்சிலை நின்ற நிலையில் காணப்படுகிறது. நேர்த்தியான அந்தச் சிலையைப் பார்ப்பதற்கே ஒருவர் அயோத்திக்குச் சென்று வரலாம். இடக் கையில் துளசி ராமாயணச் சுவடியோடும் வலக் கை அபயம் அளிக்கும் நிலையிலும் துளசிதாசரின் அந்த வண்ணச்சிலை அமைந்திருத்தது. சென்னைக் கடற்கரையில் உள்ள வள்ளுவர் சிலையைவிடச் சற்றுப் பெரிதாகத் துளசிதாசரின் சிலை அமைந்திருக்கிறது. ஆனால் சென்னையில் வண்ணச் சிலைகளைக் கடற்கரையில் காண இயலாது. எல்லாச் சிலைகளுமே சென்னைக் கடற்கரையில் கருமை பூசிக் கொண்டு துக்கம் அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றன. பிளாஸ்டர் ஆப் பாரிஸில் அழகான முதல் தரமான வண்ணச் சிலையைச் செய்ய முடியும் என்பதற்குத் துளசி பூங்காவிலுள்ள துளசிதாசரின் சிலை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

துளசி பூங்காவின் உள்ளே இருந்தபோது 'ஸ்ரீராம் ஜய் ராம் ஜய் ஜய் ராம்' என்று இனிமையாகப் பாடிக்கொண்டே யாத்திரிகர்களின் கூட்டம் ஒன்று துளசி மார்க்கில் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அந்தக் கீர்த்தனத்தைக் கேட்டதும் சுவாமி ஆத்மானந்தரின் நினைவும் வந்தது. தூரத்தில் கேட்கும் நாம சங்கீர்த்தனத்தை அருகிலிருந்து கேட்கலாமே என்ற எண்ணத்துடன் சாலையில் வந்து நின்றேன். ஆண்களும் பெண்களுமாகிய சுமார் எழுபது யாத்திரிகர் நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டே சரயு நதிக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். காவியுடையில் ஒரு சாதுவைப் பார்த்ததும் அவர்கள் ஒவ்வொருவராக நின்று நமஸ்காரம் செய்துவிட்டுச் சென்றார்கள். அந்தக் காட்சி, வடநாட்டு மக்களுக்குத்தான் சாது சன்னியாசிகளிடம் எப்படிப் பட்ட ஆழ்ந்த மரியாதை இருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிய விளக்குவதாக அமைந்தது.

சத்திரத்திற்குத் திரும்பியதும் சிற்றுண்டியுடன் கார்த்திகேயன் தயாராகக் காத்திருந்ததைக் கண்டேன்.

அன்று காலையில் கார்த்திகேயனுக்குச் சத்திரத்திலிருந்து கவனிக்க வேண்டிய வேலைகள் சில இருந்தன. ஆகவே, மாலையில் என்னை அயோத்தியில் பார்க்க வேண்டிய இடங்களுக்கு அழைத்துச் செல்வதாக அவர் கூறினார்.

இந்தி தெரியாத நிலையில் நானாகச் சென்று எந்த இடத்தையும் பார்க்கவும் முடியாது. என்றாலும் 'அயோத்தியைப் பிரதட்சிணமே செய்ய வேண்டும்; அவ்விதம் செய்யாததற்கு இந்தப் புனித மண்ணில் கால் பட்டதாகவாவது இருக்கட்டும்' என்ற எண்ணத்துடன் சுமார் எட்டு மணி அளவில் சத்திரத்திலிருந்து கிளம்பித் தனியாகவே கால் போன போக்கில் நடக்க ஆரம்பித்தேன்.

வழியில் ஒரு புத்தகக் கடையில் நான்கு பேர் நின்று இந்தியில் பேசிக்கொண்டும் சில புத்தகங்களை வாங்கிக்கொண்டும் இருந்தனர். அவர்கள் வேட்டியைத் தூக்கி மடித்துக் கட்டியிருந்த நிலையே அவர்கள் தமிழர்கள்தாம் என்பதைப் புலப்படுத்துவதாக இருந்தது. அவர்களிடம் பேசியதில், மகாபலிபுரம் அவர்களுடைய ஊர் என்றும், பிரயாகையில் கட்டப்பட்டு வரும் ஸ்ரீஆதிசங்கரர் மண்டபத்தைக் கட்டும் தொழிலாளர்கள் என்றும், அயோத்தியைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தன.

அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஏதேதோ வீதிகளின் வழியாக நடந்துகொண்டிருந்தேன். 'விபீஷண் குண்டம்' என்று சொல்லப்படும் ஒரு குளத்திற்குச் சென்றேன். அங்கிருந்து சென்று கொண்டிருந்தபோது பல பூக்கடைகளும் இனிப்புத் தின்பண்டக் கடைகளும் பொம்மைக் கடைகளும் மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஓர் இடம் வந்தது. அந்த ஆரவாரங்களைக் கண்டதுமே, 'இங்கே முக்கியமான ஏதோ ஒரு கோயில் இருக்க வேண்டும்' என்று தோன்றியது. மக்கள் சாரிசாரியாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுடன் ஒருவனாகச் சிறிய குன்றின் மீது அமைந்துள்ள கோயிலுக்குச் சென்றேன். அந்தக் கோவிலின் பெயர் 'அனுமன்கடி' என்பதாகும். சந்நிதியில் செந்தூரம் பூசிய நிலையில் ஸ்ரீஆஞ்சனேயர் இருக்கிறார். சந்நிதியின் எதிரில் சங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதே கோவிலில் முன்னால் மண்டபத்துடன் கூடிய மற்றொரு சந்நிதியும் இருக்கிறது. அங்கு ராமர், சீதை, லட்சுமணன் ஆகியோர் அருள்பாலிக்கிறார்கள். மண்டபத்தில் அங்காங்கே பக்தர்கள் அமர்ந்து பிரார்த்தனைகளிலும் பாராயணங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். மக்கள் ஏராளமாக வரக்கூடிய கோயில் இது. ஆனால் மக்கள் எண்ணிக்கையை விட, தூய்மையாக இல்லாத காரணத்தால், கோவில் முழுவதும் கோடானுகோடி ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவ்வளவு ஈக்களை அங்கே பார்த்ததும் எனக்கு மயக்கம் வராததற்குக்காரணம், ஸ்ரீஆஞ்சனேயரின் திருவருள்தான் என்று சொல்வதே பொருத்தமாகவும் உண்மையாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன். அவ்வளவு ஈக்களை அதற்கு முன்போ பின்போ ஒருசேரப் பார்த்ததில்லை.

அனுமன்கடியிலிருந்து புறப்பட்டுப் பல வீதிகளில் சுற்றிவிட்டுப் பகல் 12-30-க்கு நகரத்தார் சத்திரத்தைச் சென்றடைந்தேன். கார்த்திகேயன், தமிழ்நாட்டு முறையில் தயாரிக்கப்பட்ட அற்புதமான உணவு வகைகளைப் பரிமாறினார். சாப்பிட்டதும் அயர்ந்து நேரம் போவது தெரியாமல் உறங்கினேன்.

அயோத்திக்குச் சென்றது மிக அருமையான ஒரு வாய்ப்பு என்று சொல்லத்தக்க வகையில் அன்று மாலை பல அனுபவங்கள் ஏற்பட்டன. ஏனெனில், அன்று மாலையில்தான் கார்த்திகேயனுடன் அயோத்தியில் காண வேண்டிய எல்லா முக்கிய இடங்களுக்கும் சென்றேன். அவற்றை விளக்கமாகவே அடுத்த இதழில் பார்க்கலாம். ★

புதிய புத்தகங்கள்

இந்துமத விளக்கம்

[ஆசிரியர்: ஆத்ரேய சுந்தர நாராயணன், B.Sc, L.T.; வெளியிட்டோர்: S.N. சுந்தரராஜன், 13, ஜானகிராம் பிள்ளை தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600033. பக்கங்கள் 159, விலை: ரு 3.75]

திரு ஆத்ரேய சுந்தர நாராயணன் அவர்கள் இந்நூலை, குரு-சீடன் உரையாடல் முறையில் எழுதியுள்ளார். வாசகர்களுக்கு அலுப்பு ஏற்படாமல் ஒவ்வொரு கருத்தையும் தெளிவாக அறிந்து கொள்ள இந்த உரையாடல் அமைப்பு முறை பெரிதும் உதவுகிறது.

இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகளாகிய அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் போன்றவை பற்றிய விளக்கமும், இதிகாச-புராணங்கள் பற்றியும் இந்த நூல் ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது.

இந்து மதம் உலகுக்கு வழங்கிய ஆசார்ய புருஷர்களின் வரலாறுகள், இந்துமதப் பண்டிகைகள், இந்துமதத்தின் உட்பிரிவுகள், அவற்றின் தலையாய சாஸ்திரங்கள், மற்றும் பிற மதங்களைக் குறித்தும் இந்த நூலின் மூலம் பொதுவாக அறிந்துகொள்ள முடிகிறது. இந்தியப் பண்பாட்டிற்கு ஒரு நல்வரவாகத் திகழும் இந்நூலின் அனுபந்தமாகச் சைவ வைணவத் தோத்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

– பிரம்மசாரி முத்துக்குமார்

வரப்பெற்றோம்:

புத்தர்பிரான் அருளிய தம்மபதம்

[மொழிபெயர்ப்பும் குறிப்பும்: அ. லெ. நடராஜன், வெளியிட்டோர்: கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், மகராஜபுரம், வேதாரண்யம். விலை: ரு. 7]



உண்மையும் போலியும்

'நரேந்திரன்'

மிகவும் தர்ம சிந்தனையுள்ள ஓர் அரசன் இருந்தான். அவன் நிரந்தரமாகத் தீராத வியாதியால் பீடிக்கப்பட்டவர்களும், உடல் உழைப்பை மேற்கொள்ளச் சக்தியற்றவர்களும் தங்கியிருக்கத் தர்மவிடுதி ஒன்று கட்டினான்.

மகிழ்ச்சியுடன் சிரமமின்றி நல்ல உணவோடும் வசதியாகவும் வாழ முடிந்ததனால் பல பேர் ஏதேனும் காரணம் சொல்லிக் கொண்டு, விடுதியிலேயே அனுமதி பெற்றுத் தங்க ஆரம்பித்தார்கள். அது காரணமாக விடுதியில் கூட்டம் அதிகரித்துக்கொண்டே போயிற்று.

விடுதியின் உள்ளே சுகவாழ்வு கிடைக்கப்பெற்ற அந்தச் சோம்பேறிகள் மிகவும் பலவீனம் உள்ளவர்கள் போலப் பாசாங்கு செய்தனர். எழுந்து நடக்கவும் சக்தியற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டு, படுக்கையிலேயே மலஜலம் கழிக்கவும் துணிந்தனர். அவர்களின் இந்தச் செயல் அரசனின் செவிக்கு எட்டியது. உடனே அரசன் அந்த விடுதிக்குத் தீவைக்க ஆணை பிறப்பித்தான்.

தீயின் உஷ்ணம் உள்ளே பரவியது. விடுதிவாசிகள் உள்ளே இருந்தபடியே உதவி வேண்டிக் கூக்குரலிட்டனர். என்றாலும் அவர்களில் ஒருவர்கூடப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு முயற்சி செய்யவில்லை, தீயோ தன் நாக்குகளை நீட்டியபடி வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. சூடு பொறுக்க முடியவில்லை. யாருமே உதவிக்கு வராததனால் எல்லோரும் படுக்கையிலிருந்து எழுந்து உயிர் பிழைத்தால் போதுமென்று ஓடினார்கள். உண்மையாகவே எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் இருந்த இரண்டு பேர்களை மட்டும் அரசன் பத்திரமாக வெளியே எடுத்துவரச் செய்தான். அவர்கள் இருவரைத் தவிர மற்ற அனைவரின் செய்கைகளுமே அபத்தமானவை என்ற உண்மையும் வெளிப்பட்டது.

உண்மையான பக்தர்கள் உயிரே போனாலும் இறைவனையே நாடியிருப்பர். மற்றவர்களோ கஷ்டம் வந்தால் தன் மதத்தையும் விட்டு ஓடிவிடுவார்கள்.

சுயதர்மமே கர்மயோகம்

மனிதாபிமானமுள்ள கோடீசுவரன் ஒருவன் இருந்தான். அவன் எல்லோருக்கும் தாராளமாக உதவி செய்வது வழக்கம். அவனுடைய தயாளகுணத்தைப் பயன்படுத்திப்

பலர் அவனை ஏமாற்றிப் பொருள் பெற்றுச் சென்றார்கள். இது விஷயமாகக் கோடீசுவரனின் நண்பர்கள் அவனை அடிக்கடி எச்சரித்தனர். மேலும் அவர்கள், "நீங்கள் இதுபோலத் தராதரமின்றி உண்மையை ஆராய்ந்து பார்க்காமல் காட்டும் இரக்கமும், செய்யும் தர்மமும் துஷ்பிரயோகம் செய்வதற்குச் சமமாகும்" என்று எடுத்துக் கூறி வந்தனர்.

தன் நண்பர்களைத் திருப்திப்படுத்த விரும்பிய கோடீசுவரன் தானதருமம் செய்வதை அறவே நிறுத்திவிட்டான். அதைக் கண்ட மக்கள், "இவனுடைய மனம் மிகவும் கல் ஆகிவிட்டது. பணம் இருக்கிறதே தவிரக் கஞ்சனாக இருக்கிறான்" என்று தூற்ற ஆரம்பித்தார்கள்.

உடனே கோடீசுவரன் மிகவும் எச்சரிக்கையுடன், கேட்பவர்களை நன்கு ஆராய்ந்து பார்த்து குறைவாகவே தர்மம் செய்ய முற்பட்டான். அது காரணமாக அவன் மீது வேறுவிதமாகப் புகார் கிளம்பியது. "கோடீசுவரனாக இருக்கிறானே தவிர, பிச்சைக் காரனைப் போல இவ்வளவு கணக்குப் பார்த்துச் செலவு செய்கிறானே! வெட்கம்! வெட்கம்!" என்று கண்டபடி மக்கள் பேச ஆரம்பித்தனர்.

கோடீசுவரன் இப்போது நன்கு சிந்தித்துப் பார்த்து, 'நான் இனி முதற்கொண்டு என் விருப்பப்படியே தானதருமம் செய்யப்போகிறேன். மற்றவர்கள் சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும்? பிறருக்கு உதவ வேண்டும் என்ற தயாளமனம் இயல்பிலேயே எனக்கு இருக்கிறது. இனி நான் தாராளமாகவே தானதர்மங்கள் செய்வேன்' என்று தீர்மானமாக ஒரு முடிவு செய்தான். தான் நினைத்தது போலவே செய்து அவன் சிறந்த கர்மயோகி ஆனான்.

தன் சுயதர்மம் என்ன என்பதை அனுபவ வாயிலாகவே அந்தக் கோடீசுவரன் உணர்ந்தான். அனுபவமே ஒருவனைத் தீர்க்க சிந்தனைக்கும் திடசித்தத்திற்கும் அழைத்துச் செல்கிறது.

ஒவ்வொருவரும் சுயநலம் கருதாது அனுபவ வாயிலாகப் பிறர்நலம் பேணுவதில் இருக்கும் ஆனந்தத்தைக் காண வேண்டும். அப்போதுதான் சுயநலத்துடன் வாழ்பவர்கள் எவ்வளவு துன்பங்களை அடைந்துகொண்டிருக்கிறார்கள், அல்லது அடையப் போகிறார்கள் என்பதை அனுபவ வாயிலாக உணர்வோம்.



ஒழுக்கத்தை இழந்தவன்தான் சமயத்தையும் இழக்கிறான்.

—இங்கிலாந்துப் பழமொழி

எனக்கு மிகவும் பிடித்தமான பொருள் நல்ல புத்தகம். நல்ல புத்தகத்திற்காகப் பணம் செலவழிப்பதில் நான் ஊதாரி என்ற பட்டத்தையும் பெறத் தயார்.

—நேரு



எது வீரம்?

திருமுருக கிருபானந்தவாரியார்

வீரம் எது என்பதை விளக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கம். வீரம் என்ருல், பலர் வாள் தாங்கி வில் பிடித்துப் போர் புரிவது என்று கருதுகிருர்கள். ஆனுல் ஆயுதங்களைத் தாங்கி உயிரைத் துரும்பாக நினைத்துப் புரியும் போர், வீரம் அன்று; அது வீரமாகாது.

எத்தனை நெருக்கடி நேர்ந்தாலும் அறத்தினை விட்டு அகலாது நிற்கிற மனப்பண்பு உடையவர்களே வீரர்கள். அறநெறியை அகலாது கடைப்பிடிப்பதுவே வீரம். ஒரு சமயம் செல்வமெல்லாம் இழக்க நேர்ந்தாலும், உயிரே நீங்கும் இடர் எய்தினுலும், அறத்தைக் கடைப்பிடிப்பவரே வீரராவார்.

நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற
மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ,
இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனல் சூர ராவதே.

இந்தப் பாடல் இராமர் சுமந்திரரை நோக்கிக் கூறியது.

அறத்தின் நெறிநின்று தருமநெறியை விடாது பிடித்துள்ள ஒருவருக்கு எத்துணைத் துன்பம் நேரினும் அறத்தில் உறுதியுடன் நிற்பர். அத்தகைய வீரர் சிலர் நமது பாரதநாட்டில் வாழ்ந்தார்கள்.

அரிச்சந்திரன்

மனு குலத்திலே வந்தவன் அரிச்சந்திரன். அந்த மன்னர்பெருமானிடம் ஒரு சமயம் விசுவாமித்திரர் வந்து, ''யானைமீது ஓர் இளைஞன் நின்று வெண்கல் எறிந்தால் அந்தக் கல் எத்துணை உயரம் செல்லுமோ அத்துணை உயரம் பொன் யாகம் புரியத் தர வேண்டும்'' என்று கேட்டார். ''தருகிறேன்'' என்ருன் அயோத்தியரசன். ''வேண்டும்போது பெறுவேன்'' என்ருர் விசுவாமித்திரர்.

ஒரு நாள் அந்த முனிவர் வந்து அரசாங்கத்தை யாசித்தனர். உத்தம மன்னன் அரசை அப்போதே முனிவருக்கு வழங்கிவிட்டான்.

விசுவாமித்திரர், ''மன்னு! நீ அன்று தருவதாகச் சொன்ன பொற்குவியலைக் கொடு'' என்று கேட்டார்.

என்ன செய்வான் மன்னவன்? இல்லை என்ருல் சொல் தவறிய பாவம் வரும். சொற் சோர்வது பிழை. பொருளை ஈட்டித் தருவதாக மன்னன் காசிக்குச் சென்ருன்; மனைவியையும் மகனையும் விற்ருன். தான் சுடலை காக்கும் புலையனுக்கு அடிமையானுன். உலகம் காத்த அரிச்சந்திரன் சுடலை காத்தான். மணித் தவிசில் வீற்றிருந்த மன்னன் வெற்றெலும்பின் மீது இருந்தான். ஓமப் புகைப்பட்ட உடம்பில், ஈமப் புகை பட்டது. சிவந்த திருமேனி கருமேனியாயிற்று. பட்டும் பீதாம்பரம் உடுத்த இடையில், பிணத்தின் மீது போர்த்த சல்லாத் துணி இருந்தது. தெள்ளமுதம் உண்ட வாயில், வாய்க்கரிசியைப் பொறுக்கி உண்டான். பல ஆண்டுகள் இவ்வாறு துன்பத்தில் துடித்தான். அப்போதும் அந்த மன்னர்பெருமான் வாய்மையை விட்டு வழுவவில்லை.

இறந்த மகனைக் கொணர்ந்து விறகிலிட்டுச் சுடுவதற்கு முயல்கிருள் சந்திரமதி. உருக் குலைந்த அவளை மனைவி என்று உணராத அரிச்சந்திரன் சிதையை உதைத்து, ''ஏம்மா! இந்த மயானம் உனக்

குச் சொந்தமா? காலணாவும் முழுத் துண்டும் தர வேண்டும்'' என்றான்.

''அண்ணா! என்னிடம் ஒரு சல்லியும் இல்லை'' என்றாள் உத்தமி.

''ஏம்மா! உன் கழுத்தில் உள்ள தாலியை விற்றுக் கொடு'' என்றான் மன்னன்.

சந்திரமதி, ''அந்தோ! இந்தத் தாலி அயோத்தியை ஆளும் மன்னர் ஒருவருக்கே தெரியும். சுடலை காக்கிற இந்த வெட்டியான் கண்டானே!'' என்று கூறி அழுதாள்.

அரிச்சந்திரன் ஒருபுறம் எரிகிற பிணத்தைச் சிறிது தூண்டி நன்கு எரியவிட்டு, அந்த ஒளியில் அவளை உற்று நோக்கினான். மனைவி என்று அறிந்தான். ''பெண்மணி! மாண்டது நமது தவப் புதல்வனா?'' என்று வினவினான். கணவன் என்று அறிந்தாள் மாதரசி. ''சுவாமி! நீர் பிணம் சுட்டுக்கொண்டா இருக்கிறீர்?'' என்று கேட்டாள். இருவரும் அருமந்த மைந்தனைத் தழுவிப் புலம்பியழுதார்கள்.

அப்போது வந்தார் விசுவாமித்திரர். ''அரிச்சந்திரா! பொன் தர இசைந்த சொல்லை இல்லை என்று சொல்; உன் நாட்டையும் வீட்டையும் இறந்த மகனையும் அரசையும் தருவேன்'' என்றார்.

மன்னவன் கூறுகிறான்: ''விசுவாமித்திரரே! நீர் கலையுணர்ந்தவரா! உமக்கு இது அழகா? பொய் கூறி நான் கற்பகோடி யுகமா வாழப்போகிறேன்? இந்த உடம்பைப் புலையனும் விரும்புவதில்லை. இந்தப் புன்புலால் யாக்கையைப் பெரியதென நினைத்து உயிரினும் உயர்ந்த சத்தியத்தை விடுவேனோ? முனிவரே! உடைந்த கண்ணாடிகூடப் பின்புறம் சுவர் மீது வைக்க உதவும். உடைந்த பானையோடும் வறுக்கும் ஓடாக உதவும். மாண்ட உடும்பின் தோல் கஞ்சிராவுக்கு உதவும். உடைந்த பொருள்கள் யாவும் வேறு ஒரு வகைக்குப் பயன்படுகின்றன. மனிதன் இறந்துபோனால் இந்த உடம்பு ஒன்றுக்கும் பயன்படுவதில்லை. இத்தகைய அசுத்தமான இந்த உடம்பு வாழ வேண்டும் என்று பொய் புகல்வதா? நாங்கள் நகரத்தை இழந்தோம்; அருந்தவப் புதல்வனை இழந்தோம்; செல்வத்தை இழந்தோம்; இனி எமக்குக் கிடைக்க இருக்கும் பரகதியையே இழக்க நேரினும் சொன்ன சொல்லை இழக்கமாட்டோம்'' என்றான்.

'ஆ! ஆ!' என்று வானில் ஓர் ஒலி தோன்றியது. மதியையும் வாயையும் இழந்து விசுவாமித்திரர் மறைந்தார்.

> புலையனும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை
> நிலையெனா மருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
> தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
> கலையுணர்ந்த நீ எமக்கிது கழறுவ தழகோ?
>
> பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் பெற்ற
> நிதியிழந்தனம் இனி எமக்குண்டென நினைக்கும்
> கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலன் என்றான்;
> மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

மலை புரண்டுவரினும், கடல் கொந்தளித்துப் பொங்கிவரினும், வானம் இடிந்து தலைமீது விழ நேர்ந்தாலும், தருமநெறி நின்று வழுவாது நிற்கும் செயலே வீரச் செயல். இத்தகைய வீரர்களில் முன்னணியில் நிற்கிறவர் அரிச்சந்திரர். இவர் தருமவீரர், மகா வீரர்.

அர்ச்சுனன்

ஔவையார், ஐம்புலன்களை வென்றவனே வீரன், ''புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்'' என்கிறார்.

ஞானமாகிய அங்குசத்தால், ஐம்பொறிகளாகிய மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐந்து யானைகளை அடக்கினவனே சிறந்த வீரன் என்கிறார் திருவள்ளுவர்.

> உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

அர்ச்சுனன் இந்திரநீல மலையின்மீது நின்று பொறி புலன்களை அடக்கி மனதை ஒடுக்கி அரிய பெரிய தவம் செய்தான்; பூட்டிய பூட்டை இழுத்துப் பார்ப்பது போல், மகனுடைய தவம் உறுதியாக உள்ளதா என்று ஆராய்ந்தறிய நினைத்தான் இந்திரன். அரம்பை மேனகை திலோத்தமை ஊர்வசி என்ற நான்கு அழகின் சிகரங்களாகிய தேவமாதர்களை அனுப்பினான்.

அவர்கள் மயில் குயில் தென்றற்காற்று மதனன் முதலிய பரிவாரங்களுடன் வந்தார்கள். அசைவற நின்று தவம் புரியும் அர்ச்சுனப் பெருமானுக்கு முன்னே நின்று இன்னிசையுடன் பாடினார்கள். சிலம்போசையுடன் ஆடினார்கள். தாங்கள் கற்ற சாகசங்களைப் புரிந்தனர். தனஞ்சயன் மனஞ்சயனாக நின்றான். இரும்புத் தூண் போலே நின்றான். விழித்திருந்தும் அவன் அவர்களைப் பார்க்கவில்லை. காது இருந்தும் கீதங்களைக் கேட்கவில்லை. மூக்கிருந்தும் நறுமணங்களை நுகரவில்லை. அவன் ஞான வீரனாக நின்றான். தேவமாதர் நாணினர். ''விசுவாமித்திரராதி முனிவர்கள் எல்

லாம் நம்மைக் கண்டு நிலைகுலைந்தார்களே? இந்த இளைஞன் நம்மைக் கண்டு ஒருசிறிதும் குலையாது வைரத் தூண் போல் நிற்கிறானே; இது என்ன அதிசயம்!'' என்று கூறி அஞ்சி அகன்றார்கள்.

பிறகு சிவபெருமான் வெளிப்பட்டு அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் வழங்கினார். யாரும் பெறாத அருளை அர்ச்சுனன் பெற்றான். இதனை அறிந்த இந்திரன் பெரிதும் உவந்தான். மகனிடம் வந்து, உள்ளம் குழைந்து தழுவினான். செம்பொற்றேரில் ஏற்றி அமராவதி நகருக்கு அழைத்துச் சென்றான். பொன்னுலகில் தனஞ்சயனுக்கு இந்திரன் பட்டாபிஷேகம் செய்தான். அரம்பையராகிய ஊர்வசி முதலியோர் நடனம் ஆடினார்கள். பரதக் கலையில் வல்லவனாகிய அர்ச்சுனன் இடமறிந்து தலையசைத்து, முடிவில் சிறந்த பரிசுகளை வழங்கினான். அவனுடைய அளவற்ற எழிலைக் கண்ட ஊர்வசி அவன் மீது காதல் கொண்டாள்.

அன்றிரவு தனியே சிறந்த பொன்மாளிகையில், அர்ச்சுனன் மலரணைமீது துயில் புரிந்துகொண்டிருந்தான். ஊர்வசி நன்கு அலங்கரித்துக்கொண்டு நறுமணம் கமழ, பழங்கள் நிறைந்த நவமணித் தட்டுடன் நடுநிசியில் வந்தாள். அர்ச்சுனன் அவளுடைய பாதச் சிலம்போசை கேட்டுக் கண்விழித்து எழுந்தான். ''தாயே! வருக. உனக்கு வணக்கம்'' என்று கூறி அவள் பாதமலர்மீது விழ்ந்தான். ஊர்வசி திகைத்து நின்றாள்; நாணினாள்; சீற்றமும் கொண்டாள். ''அரசர்கோமானே! உன்னை மகன் என்று கருதியா நடுநிசியில் வந்தேன்? என் ஆர்வத்தைக் கெடுத்தனையே. நான் பொதுமகள்தானே. உன்னை விரும்பி வந்தேனே. என் எண்ணத்தைக் கடலில் கரைத்த காயம் போல் விணாக்கினாயே. இது முறையா?'' என்றாள்.

''அம்மா! உன்னைப் பொதுமகள் என நான் அறிவேன். நான் இப்போது பொன்னுலகத்துக்கு அரசன். நீ என் சபை நடனமாது. நீ எனக்கு உரிமையானவள். ஆனால் திருநீறு தரித்து ஐந்தெழுத்தை ஓதிச் சிவசிந்தை செய்யும் நான், பொதுமகளாகிய உன்னை ஏற்றுக்கொள்ளமாட்டேன். நீ என் பிதாவை மருவியபடியால் எனக்கு அன்னை முறையாகிறாய். சிவனடியே சிந்திக்கும் திருவுடைய நான் உன்னைத் தீண்ட மாட்டேன்'' என்று உறுதியுடன் உரைத்தான். அப்போது அறக்கடவுள் 'ஆ!' என்று வியந்து தலையசைத்தது. அவனுடைய தரும வீரத்தைக் கண்டு உலகம் அதிசயமுற்றது. இதுதான் வீரம்.

அஞ்ஞாதவாசத்தில் அர்ச்சுனன் பேடியுருவமுற்று விராடனுடைய நகரத்தில் அவனுடைய அருமைப் புதல்விக்குப் பரதக் கலையைக் கற்பித்து வந்தான். ஓராண்டு முடிந்தது. பாண்டவர்கள் பண்டைய உருவமெடுத்தார்கள். சபையில் தருமரும் வீமனும் அர்ச்சுனனும் நகுல சகாதேவரும் வீற்றிருந்தார்கள்.

விராடராஜன் மலர்மாலைகளுடனும் கனிவர்க்கங்களுடனும் வந்து தருமருடைய தாள்மலர்மீது வணங்கினான். ''மன்னர்பெரும! என் நாடு நகரம் முழுவதும் தங்களுக்குக் காணிக்கையாகத் தந்தேன். என் மகள் உத்தரகுமாரியை அர்ச்சுனருக்கு மனைவியாகத் தந்தேன்'' என்றான்.

அப்போது அர்ச்சுனன் விராடவேந்தனை நோக்கி, ''வேந்தே! உன் அன்புக்கு நன்றி. உன் மகளுக்கு நான் ஓராண்டு பரதக் கலையை ஓதுவித்தேன். அவள் என் மாணவி. மாணவி எனக்கு மகளாக வேண்டும். நீ எனக்குத் தந்த அவளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். மருமகளாக ஏற்றுக் கொள்ளுகிறேன். என் மகன் அபிமன்யுவுக்கு அவளை மணம் செய்து மருகியாகக் கொள்வேன்'' என்றான்.

அழகிய இளம் பெண்மணியை, பல நாள் பழகிய எழிற்கொடியை, அவள் தந்தை வலிதில் தருகிறேன் என்று கூறியும், அவளை மனைவியாகக் கொள்ளாது மருகியாகக் கொண்ட தனஞ்சயனுடைய தரும வீரமே வீரம்.

மெய்ப்பொருள் நாயனார்

திருநீறு புனைந்தார் யாவரேனும் வணங்கி வழிபட வேண்டும் என்று உறுதி கொண்ட மெய்ப்பொருள் நாயனாரை, வஞ்சகனாகிய முத்திநாதன் திருநீறு பூசி அடியவராக வந்து, ஆகம நூல் அவிழ்ப்பான் போல் வாள் எடுத்து வீசினான். குருதியொழுக உயிர் துடித்து வீழ்கிற மெய்ப்பொருள் நாயனார் தமது தருமநெறி தவறாது தொழுது வென்றார். அவனைக் கொல்ல வந்த தத்தனை நோக்கி, ''தத்தா, அவர் நம்மவர்; அவரை அபாயமின்றி நகரைக் கடக்குமாறு செய்'' என்று பணித்து, முத்திநாதனை ஊர்தாண்டி விடுத்துத் தத்தன் வருமளவும் உயிர் தாங்கியிருந்து, சிவனடி சார்ந்த மெய்ப்பொருள் நாயனாருடைய தருமவீரமே வீரம். ★

ஸத்குரு

சுவாமி அமரானந்தர்

குரு இல்லாத வித்தை குருட்டு வித்தை என்பர். உலகில் எந்த ஒன்றைக் கற்றுக்கொள்வதானாலும் ஆசிரியர் அவசியம். ஒரு தொழில் கற்க வேண்டு மானால் அதை அறிந்தவரிடமே கற்க வேண்டியிருக் கிறது.

உடற்பயிற்சி, சிலம்ப விளையாட்டு முதலிய வற்றைச் சொல்லிவைக்கும் ஆசிரியர் அவற்றைக் கற்கும் மாணவர்களுக்குக் குருவாகிறார். இனி, தாழ்வாகக் கருதப்படும் திருட்டுத் தொழிலுக்கும் ஆசிரியர் வேண்டியிருக்கிறது. பிக்பாக்கெட் செய் யும் கூட்டத்துக்கு அதில் நிபுணத்வம் வாய்ந்த ஒருவன் மாஸ்டராக இருக்கிறான். இவர்கள் எல்லோ ரும் உலக விவகாரம் சம்பந்தமான வித்தைகளுக் குக் குருவாக இருக்கிறார்கள். உலக வாழ்வு அநித் யம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்த வாழ்வுக்கு வழி காட்டுபவர் சாதாரணமாக, குரு என்று அழைக்கப்படுகிறார். ஆனால் நித்தியமான, மரணமிலாப் பெருவாழ்வான பாரமார்த்திக வாழ் வுக்கு வழிகாட்டுபவர் ஸத்குரு ஆகிறார். அந்த ஸத்குருவின் பேரியல்புகளைத் தந்திர சாஸ்திரம் பின் வருமாறு விளக்குகிறது:—

ப்ரஹ்மாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஜ்ஞாநமூர்த்திம்
த்வந்த்வாதீதம் ககநஸத்ருசம் தத்வமஸ்யா திலக்ஷ்யம் |
ஏகம் நித்யம் விமலம் அசலம் ஸர்வதீஸாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும் தம் நமாமி ||

ப்ரஹ்மானந்தம்—:பெரியஒருவிருந்துநடைபெறு கிறது. அன்னத்துடன் பலவகைப் பதார்த்தங்கள் பரிமாறப்படுகின்றன. ரசத்துக்குப் பிறகு பாயாசம் விநியோகிக்கப்படுகிறது. பாயசமோ சுத்தமான நெய்யும் பாலும் கலந்து செய்யப்பட்ட சேமியா பாயசம். சுவைக்காகவும் மணத்துக்காகவும் சீனி, திராட்சை, முந்திரிப் பருப்பு, குங்குமப்பூ, ஜாதிக் காய், ஏலக்காய், ரஸகர்ப்பூரம் முதலானவை சேர்க் கப்பட்ட பரமான்னம் அது. அதைச் சுவைத்துச் சாப்பிடக்கூடிய ஒருவர் இருக்கிறார். அவருக்கு இரண்டு கரண்டி முதலில் பரிமாறப்படுகிறது. சுவைத்து உண்கிறார். அதைப் பார்த்து மேலும் இரண்டு கரண்டி வார்க்கப்படுகிறது. அதையும் ஆவலுடன் அருந்தி ஆனந்தம் என்கிறார். பரிமாறு பவர் அனுபவசாலியாதலால் அதைக் கண்ணுற்று, மீண்டும் இரண்டு கரண்டி கொடுக்கிறார். அதைச் சாப்பிட்டு, 'பிரம்மானந்தம்' என்று சொல்லிக் கொண்டே, 'போதும்' என்று தடுத்துவிட்டார். ஆனந்தத்திலே பிரம்மானந்தம் என்பது மேலும் வேறு எதுவும் வேண்டப்படாத போதும் என்ற நிறை ஆனந்தம் ஆகிறது.

ஆனால் உண்டியின் சுவையினால் ஏற்பட்ட ஆனந்தம் நிரந்தரமானதல்ல. விருப்போடு உண்ட அது வெறுப்பான மலமாக மாறிவிடுகிறது. மிகைப் பட உண்டதனால் உடலில் நோயையும் அது உண்டு பண்ணுகிறது. மாறுபடக்கூடிய இந்த ஆனந்தம் சிற்றின்பம் ஆகிறது. பாயசம் அருந்திய கணநேரம் இந்திரியங்கள் அடங்கி மனம் ஆத்மசொருபத்தில் லயித்ததனால் ஏற்பட்ட சிறிது நேர இன்பமாகும் இது; அதாவது விஷயசுகத்தால் ஏற்பட்டதாகும். விஷயங்கள் இன்றியே சாதனையின் மூலம் இந்திரி யங்களைக் கட்டுப்படுத்தி மனதை ஆத்மசொருபத் தில் கரையச் செய்தால் அப்போது இருப்பது நிரந்தரமான பேரின்பமாகிய பிரம்மானந்தம்.

ஆசைகளை அடக்குவதனால் மனதைக் கட்டுப் படுத்த முடிகிறது. மனதில் எழுகிற ஆசைகளை அடக்கி, ஆத்மாவைக் கொண்டு ஆத்மதிருப்தி அடைந்தவன் ஸ்திதப்ரஜ்ஞன் ஆகிறான் என்பது கீதையின் கோட்பாடு. ஸ்திதப்ரக்ஞை, பரப் பிரம்மம், பிரம்மானந்தம் ஆகிய மூன்றும் ஒரு பொருளுடையவை. ஆனந்தம் பிரம்மம் என்பது வேதவாக்கு. குரு ஆசைகளை அடக்கியவராதலால் பேரறிவுடன் எப்போதும் பிரம்மானந்தத்தில் திளைக் கிறார்.

பரமஸுகதம்—: பரமம் என்ற சொல் முற்றிலும் என்ற பொருளுடன் பழக்கத்தில் இருக்கிறது. பரமதிருப்தி, பரம சந்தோஷம், பரம அநியாயம் என்ற சொற்கள் வழக்கத்தில் இருப்பதைக் காண லாம். முற்றிலும் சுகமாக இருப்பது எது? ஆத்ம சுகம் ஒன்றே முழுதும் சுகமுடையதாக இருக்கிறது.

லௌகிக வாழ்க்கையில் முன்னோர்களின் ஆஸ்தியை வைத்துக்கொண்டு அதன் வருவாயி லேயே வாழ்க்கையை நடத்தும் ஒருவனைச் சுக

புருஷன் என்கிருர்கள். அவன் கஷ்டப்பட்டு வேலை எதுவும் செய்யாமல் சுகஜீவனம் நடத்துகிறன். ஆனல் அவனுடைய சுகம் நிரந்தரமாவதில்லை. குடும்பம் விரிவாகிப் பெரியதாகும்போது வருவாய் போதாமல் திண்டாடுகிருன். வேலை செய்து பழக்க மின்மையால் சங்கடங்களுக்கு ஆளாகிருன். எனவே இது பரமசுகம் ஆவதில்லை.

'இந்திரியங்களைத் தடுத்து வைப்பவனுக்கு விஷயானுபவங்கள் இல்லை. ஆசை உண்டு. பரமாத் மாவைத் தரிசித்தபின் அவனுடைய ஆசையும் அழிகிறது' என்பது கீதையின் வாக்கியம். குரு ஆசைகளை அடக்கிப் பரமாத்ம தரிசனம் பெற்றவ ராகையால் பிரம்மானந்தத்தில் திளைத்திருக்கும் அவர் 'பரமஸுகதம்' என்ற சொல்லுக்கும் இலக் காக இருக்கிருர்.

கேவலம்—: இந்தச் சொல் நிச்சயிக்கப்பட்டது, அல்லது ஒப்பற்ற தனிப்பொருள் என்று பொருள்படு கிறது. நிச்சயம் அதுதான் என்று சொன்னல், அது தவிர வேறு இல்லை, அது ஒன்றேதான் உள்ளது, அதுவேதான் உண்மை என்று உறுதி உண்டா கிறது.

பொறிகளுக்குப் புலப்படுகிற பொருளெல்லாம் பொய்யாகிவிடுகின்றன. பனிக்கட்டி ஒன்று பாத்தி ரத்தில் தென்படுகிறது. பிறகு சிறிது நேரத்தில் அது தண்ணீராக மாறிவிடுகிறது. பாத்திரத்தை அடுப்பில் ஏற்றிச் சூடாக்கினல் நீரெல்லாம் ஆவியாகப் போய் விடுகிறது. இந்திரஜாலம் போல மாறிக்கொண்டே இருக்கிறது. தண்ணீரும் ஜலவாயு பிராணவாயு ஆகிய இரண்டு வாயுக்களின் கூட்டுப் பொருளாகும். கண்ணுக்கு எதிரே தெரிகிற மரம் பல வருடங் களுக்குப் பிறகு பட்டுப்போய் மண்ணோடு மண்ணுகிறது, அல்லது எரிக்கப்பட்டுச் சாம்ப லாகிறது. வாழ்க்கை நீர்மேல் குமிழி போன்றது. இதை உணர்ந்த பட்டினத்தடிகள் போன்ற சான்றோர்களுக்குப் பாரணைத்தும் பொய்யாகிவிடு கிறது.

ஜகத் மித்யையாக இருப்பின் சத்தியப் பொருள் எது? மெய்ப்பொருள் அதாவது பிரம்மம் ஒன்றே சத்தியம். அதுவே நிச்சயமாக இருப்பது ஆகும்.

நவீன பௌதிக விஞ்ஞானமும் ஓரளவு இந்த முடிவுக்கு வருகிறது. எல்லாப் பொருள்களுக்கும் மூலமாக புரொடான் (Proton), எலக்ட்ரான் (Electron) என்ற இரண்டு அணுப் பொருள்கள் இருக்கின்றன என்றும், அவற்றில் புரொடான் அசையாத சக்தியாகவும் (Static energy) எலக்ட் ரான் அசையும் சக்தியாகவும் (Kinetic energy) இருக்கின்றன என்றும் விஞ்ஞானம் கூறுகிறது.

இதையே சிவசக்தி என்று இந்துமதம் கூறுகிறது. இந்தச் சக்தி சிவத்தில் அடங்கி, எஞ்சுவது சிவம் ஒன்றே என்பது சாஸ்திரங்களின் முடிவு. விஞ்ஞா னம், அசையும் சக்தி, அசையாத சக்தியில் அடங் குகிறது என்பதைக் கண்டுகொள்ளவில்லை, கண்டு கொள்ளவும் இயலாது. ஏனெனில், பௌதிகப் பொருள்களிலேயே அதன் ஆராய்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. அதாவது வெளிமுக ஆராய்ச்சி யாக அது இருக்கிறது. பகிர்முகத்தில் அதை அறி வது இயலாத காரியமாகும். உள்ளது பேரறிவான பிரம்மம் ஒன்றே என்பது அந்தர்முகத்தாலேயே அறியக் கூடியதாகும்.

இனி, அந்த மெய்ப்பொருள் ஒப்பற்ற தனிப் பொருளாகவும் இருக்கிறது. பாலும் தண்ணீரும் தனித்தனிப் பொருள்களாகப் வழக்கத்தில் இருக் கின்றன. இரண்டும் தூய்மையானவை. அவை இரண்டும் கலந்தால் அது சுத்தமான பாலுமல்ல, சுத்தமான நீருமல்ல. தங்களுடைய புனிதத்தன் மையை இரண்டும் இழந்துவிடுகின்றன. கலப்படம் ஆகும்போது இரண்டும் தனித்தன்மையை இழந்து விடுகின்றன.

பரம்பொருள் எப்போதும் எதனுடனும் கலவாமல் ஒப்பற்ற தனிப்பொருளாகக் களங்கமின்றி இருக் கிறது. சினிமாத் திரையின் மேல் தீப்பற்றி எரியும் காட்சியும் மழைபெய்யும் காட்சியும் காண்கின்றன. ஆனல், திரையோ எரிந்து போவதுமில்லை, நனைந்து போவதுமில்லை. புவனம் கடந்த உள்ளமாக இருந்து, தன்மேல் அழகு ஒழுக எழுதிய உயிரோவி யமான இந்த உலகைத் தாங்கிக்கொண்டிருந் தாலும் உலகச் செயல்களால் மெய்ப்பொருள் கலக்கமடைவதில்லை. சத்குரு பிரம்மானந்தத்தில் திளைத்து, பரமசுகியாக இருந்து, கேவலம் என்ற ஒப்பற்ற தனிப்பொருளின் பெருமையையும் பெறு கிருர்.

ஜ்ஞாநமூர்த்திம் —: ஞானம், அறிவு இரண்டும் ஒரு பொருளுடையவை. அறிவை, சிற்றறிவு பேரறிவு என்று இரண்டு வகையாகப் பாகுபடுத்த லாம். சிற்றறிவு என்பது புலன்களால் புலப் படுத்தப்படும் இந்த உலகையும் அதன் நடை முறையையும் தெரிந்துகொள்வதாகும். பேரறிவு என்பது மன வாக்குக்கு எட்டாத பெரிய பொரு ளாகிய பரம்பொருளைப் புரிந்துகொள்வதாகும்.

'புலன்கள் புகட்டுகிற இந்தப் புவனத்தையும் அதன் நடைமுறையையும் அறிந்துகொள்வது வாழ்க்கைக்கு அவசியமாகிறது. அதை விட்டு, பொறிகளுக்கு அப்பாலுள்ள பொருளைப் பற்றி ஏன் சிந்தித்துக் கவலைப்பட வேண்டும்?' என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் தெரிந்து கொள்ள வேண்டியது அந்தப் பரம்பொருள்தான். கவலைப்பட்டு அதைத் தெரிந்துகொள்ளும்போது தான், நமது கவலைகளெல்லாம் நீங்குகின்றன. புவனத்தைப் பற்றி ஆராய்வது பூர்த்தி செய்ய முடியாத ஒரு புதிராகும். குறைபாடுகள் இருந்து கொண்டே இருக்கும். எவ்வளவு அறிந்தாலும் மேலும் ஒரு பிரச்னை எதிரே வந்து நிற்கும். குறைபாடு உள்ள வரையில் சாந்தி உண்டாவதில்லை. மனம் பாதரசம் போல் சஞ்சலப்படுமே அல்லாமல் பரமசுகமான சாந்தி வந்து சேராது. எதை அறிந்துகொண்டால் புவனம் உட்பட அனைத்தையும் அறிந்தது ஆகிறதோ அதுவே அந்தப் பேரறிவான பரம்பொருள். அதை அறியும்போது, மேற்கொண்டு அறிய வேண்டியது யாதுமில்லை என்று பரமசுக சாந்தி உண்டாகிறது.

யாரோ ஆயிரத்தில் பதினாயிரத்தில் ஒருவர்தாம் இந்தப் பெரிய பொருளை நினைந்து நினைந்து இந்தப் பரம்பொருளின் மயமாகிறார்கள், பேரறிவைப் பெறுகிறார்கள்; ஞானிகள் என்ற சொல்லுக்குப் பொருந்துகிறார்கள். அவர்கள் இந்த மனித உடல் தாங்கி வாழ்வதால் மூர்த்தி என்ற பெயரும் அவர்களுக்குப் பொருந்துகிறது. அந்த மூர்த்திகள், ஆலயத்தில் காணப்படும் மூர்த்திகளைவிட மேலானவர் ஆகின்றனர். கோயிலில் குடியிருக்கும் தெய்வம் பேசுவதில்லை. இந்த ஞானமூர்த்திகள் பேசும்—நடமாடும் தெய்வங்களாக விளங்குகின்றனர். 'கல்லையும் செம்பையும் செம்பொருளென வணங்கும்போது, மனித உருவிலே உள்ள குருவை ஏன் கடவுள் என வழிபடலாகாது?' என்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். எனவே ஸத்குரு ஒருவர் ஞானமூர்த்தியாக விளங்குகிறார்.

த்வந்த்வாதீதம்—:த்வந்த்வம் என்ற சொல்லுக்கு, இரண்டு என்பது பொருள். இருவர் சண்டை செய்வதை த்வந்த்வ யுத்தம் என்று சொல்கிறார்கள். ஆண் பெண், நன்மை தீமை, இன்பம் துன்பம், நல்வினை தீவினை போன்ற இரட்டைச் சொற்கள் உலக வழக்கில் உள்ளன. இங்கு நல்வினை, தீவினை என்ற பதமே விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

எது மனிதனுக்கு நன்மை தருகிறதோ அது நல்வினையாகும். புலன்களைப் புறத்தே செல்லாமல் தடுத்தல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்திர ஞானம், ஈசுவர நம்பிக்கை ஆகிய இவை யாவும் சத்கருமங்களாகும். இதற்கு மாறாக, ஆசையின் வசப்பட்டு இந்திரியங்களை இஷ்டப்படி ஏகவிடுதல், தவமின்மை, சுத்தமின்மை, பொறாமை, பொய்பேசுதல், சிந்தனைசக்தி இன்றியிருத்தல், கடவுள் நம்பிக்கை இல்லாமை, கோள் சொல்லுதல், வஞ்சகம், முரட்டுத்தன்மை, சோம்பேறித்தனம் ஆகிய யாவும் தீவினைகளாகும்.

இத்தகைய தீய கருமங்களில் ஈடுபடும் ஒருவனுக்கு வாழ்க்கையில் சாந்தி உண்டாவதில்லை. மேலும் மேலும் ஆசைகளின் வசப்பட்டுத் திருப்தியின்றி இது போன்ற கெட்ட காரியங்களையே செய்துகொண்டு போகிறான். அவன் தன்னைத் தானே பாவியாக்கிக் கொள்ளுகிறான். எனவே அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் சாந்தி உண்டாவதில்லை. சாந்தி இல்லையேல் சுகமில்லை (அசாந்தஸ்ய குத: ஸுகம்). தானம், தவமுடைமை முதலிய நற்காரியங்களில் ஈடுபட்டுள்ளவனின் மனம் பண்பட்டு ஆசைகளிலிருந்து மீட்டு எடுக்கப்பட்டுச் சாந்திநிலையாகிய பரம்பொருளைப் பரவசத்தோடு நாடுகிறது. ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், ஸ்ரீ கீர்த்தி, பலம், வீரியம், தேஜஸ் முதலிய எண் குணங்களையுடைய இறைவனை அடைய வேண்டுமானால் இந்த த்வந்த்வம் என்ற சொல்லுக்கு இலக்காக உள்ள நல்வினை தீவினை ஆகிய இருவினைகளையும் கடந்தாக வேண்டும். தீவினை இரும்புச் சங்கிலியானால் நல்வினை பொற்சங்கிலியாகும். இருசங்கிலிகளாலும் கட்டுண்டு கிடப்பது பந்தமாகும். எனவே இந்த இருவினைகளையும் கடந்தாக வேண்டும்.

> இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்பது பொய்யாமொழி. அதீதம் என்பது அப்பாற்பட்டது. நல்வினை தீவினை ஆகிய இரண்டுக்கும் அப்பாற்பட்டிருப்பது த்வந்த்வாதீதம் ஆகிறது. ஸத்குருவினிடத்தில் இருவினையும் சேருவதில்லை.

ககநஸத்ருசம்—: ஆகாயம் போன்றது என்பது இதன் பொருள். ஐம்பெரும் பூதங்களில் முதன்மையானது ஆகாயம். பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய மற்ற நான்கு பூதங்களையும் ஆகாயம் தாங்கிக்கொண்டிருக்கிறது. இடையீடின்றி எங்கும்

பரந்து நீலநிறமாகத் தென்படுவது ஜட ஆகாயம். இவற்றுக்கெல்லாம் இனி ஆதாரம் சிதாகாசம். சிதம்பரம், சிற்றம்பலம் என்னும் அது சொல்லப் படுகிறது. தோன்றும் ஜட ஆகாசம் பொன்னம்பலம் ஆகிறது. சிற்றம்பலம் என்னும் தில்லையம்பதி இந்தத் தத்துவத்தை விளக்குகிறது.

தான் உண்டு, தன் வீடு உண்டு என்று மற்றவை பற்றிச் சிந்திக்காத குறுகிய மனப்பாங்குள்ளவர்கள் முதலாக விசும்பு போன்று உலகனைத்தையும் உள்ளடக்கிய பரந்த உள்ளம் படைத்தவர்கள் வரை பலதரப்பட்ட மக்களைப் பிரபஞ்சத்தில் காணலாம். தன் குடும்பமே பெரிது என்று இருப்பவனைவிட, அந்த ஊர்ப் பொது மனிதனுக இருந்துகொண்டு மக்கள்பொருட்டுப் பொதுப்பணிகளைச் சிரத்தை யோடு செய்பவன் சற்று விரிந்த மனப்பாங்கு உடையவன் ஆகிறுன். அடுத்து மாவட்ட, மாநில உணர்வு கொண்டவர்களுடைய உள்ளம் மேலும் விரிவடைகிறது. நாடு முழுவதும் ஒன்று என்று எண்ணி, அதைப் பொதுவாகக் காண்பவன் தேச பக்தன் என்னும் பெயருடன் பரந்த உள்ளம் படைத்தவனுகிறுன். அடுத்து, உலகெலாம் ஒன்று என்று கருதும் உன்னத நிலையிலுள்ள சுவாமி விவேகானந்தர் போன்ற பரந்த உள்ளம் படைத் தவர்கள் வருகிறுர்கள்.

சுவாமி விவேகானந்தர் அயல்நாட்டில் இருந்த போது, அவருடைய குரு சகோதரர்கள் அவர் அவசரமாகத் தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். சுவாமிஜி தாம் பாரதநாட்டுக்கு மாத்திரம் உரியவரல்ல, உலகம் அனைத்துக்கும் உரியவர் என்று சொல்லித் தம் சகாக்களின் சொல்லுக்குச் செவிசாய்க்க வில்லை. ஸத்குரு இவ்விதம் ஆகாயம் போன்று பரந்த மனப்பாங்கு உள்ளவராதலால் ககநஸத்ரு சம் என்ற பேரியல்பு அவருக்குப் பொருந்துகிறது.

தத்வமஸ்யாதிலக்ஷ்யம்— :ரிக், யஜுஸ், ஸாம, அதர்வம் ஆகிய நான்கு வேதங்களுக்கும் முறையே ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம, அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்த்வமஸி, அயமாத்மா ப்ரஹ்ம என்ற நான்கு மகாவாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. அவற் றுள் ஸாமவேத மகாவாக்கியமான தத்த்வமஸியைச் சிறப்பித்து, இங்கு முதன்மையாக வைத்து, அதன் பொருளுக்கு லட்சியமானவர் ஸத்குரு என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்று என்பதை இந்த வாக்கியம் சுலபமாக விளக்குகிறது. தத்த்வமஸி என்பது தத்-த்வம்-அஸி என்று பிரியும். மகாவாக்யத்தில் தத் என்னும் சொல் அது என்ற பொருளுடன் பரமாத் மனைக் குறிப்பிடுகிறது. த்வம் என்னும் வார்த்தை நீ என்னும் அர்த்தத்துடன் ஜீவாத்மனைச் சுட்டுகிறது. அஸி என்னும் பதம் ஆகிறுய் என்ற பொருளில் ஜீவாத்மனையும் பரமாத்மனையும் ஒன்ருக்குகிறது. ஆச்சரியப்படத் தக்க அளவுக்கு ஆத்மசொரு பத்தை அறிந்த ஆசாரிய புருஷர்கள் இந்தத் தத்த்வ மஸி மகாவாக்கியத்தை இமைப்பொழுதும் தம் நெஞ்சில் நீங்காமல் வைத்திருப்பதையே லட்சிய மாகக் கொண்டிருக்கிறுர்கள்.

[அடுத்த இதழில் முடியும்]



பழைய தவறுகளையே புதிய முறையில் மீண்டும் செய்வதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. தெளிந்த சிந்தை வேண்டும் திட நெஞ்சு வேண்டும்,

—அரவிந்தர்



வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே ! நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு நிச்சயம் இளைப்பாறுதல் தருவேன்.

—பைபிள்

அருட்செல்வர் பூந்தானம்

ஆர். சக்திதரன்



1

பூந்தானம் பக்தியில் தோய்ந்தவர். ஆனால் சாஸ்திரவிதிகளுக்கு உட்பட்டுத் தியானம், பூஜை, பிரார்த்தனை ஆகியவற்றை எப்படிச் செய்வது என்பது அவருக்குத் தெரியாது. மனதைச் சதாசர்வ காலமும் கண்ணனிடம் லயிக்கச் செய்ய விரும்பிய அவர், சாஸ்திர ரீதியில் வழிபாட்டு முறைகளைத் தமக்குக் கற்பிக்கக் கூடிய மகான் ஒருவரை ஆவலுடன் எதிர்பார்த்தார். என்றாலும் அவர் தம்முடைய இந்த எண்ணத்தைப் பிறரிடம் தெரிவிக்காமல் மனதிற்குள்ளாகவே வைத்திருந்தார். காரணம், இயல்பாகவே அவர் அமைதியான குணம் உடையவர். யாரிடத்திலும் அதிகமாகப் பேசவோ பழகவோ செய்யாதவர்.

ஒரு நாள் பூந்தானம் வழக்கம் போல் குருவாயூரப்பனின் கோவிலுக்குள் நுழைந்தபோது, பட்டதிரி கோவில் சந்நிதியில் நாராயணீயத்தைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார். அன்றைய தினம் அவருடைய நாராயணீயப் பிரவசனத்தைக் கேட்பதற்காகவே வெளியூர்களிலிருந்தும் பல பண்டிதர்கள் வந்திருந்தார்கள். பிரவசனம் முடிந்ததும் பட்டதிரியை அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள். அதோடு கோவிலைச் சேர்ந்தவர்களும் பூமாலை சூட்டி வேறு பல மரியாதைகளையும் பட்டதிரிக்குச் செய்தார்கள்.

தமது நண்பராகிய பட்டதிரி கண்ணனின் புகழைச் சொல்லிக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டபோதே பூந்தானத்தின் மனம் மகிழ்ச்சியில் கரைபுரண்டது. பட்டதிரியின் ஞானத்தைக் கண்டு வியந்து வெளிப் பிராகாரத்திலேயே அவர் நின்றுவிட்டார்.

கோவில் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு குருவாயூரப்பன் சந்நிதியிலிருந்து கிளம்பிய பட்டதிரி, வழியில் பூந்தானம் தயங்கி நின்றுகொண்டிருந்ததைக் கண்டார். 'பூந்தானம் அப்பழுக்கில்லாதவர், உலகியல் விஷயத்தை விட்டு ஆத்மஞானம் பெற விரும்பியவர். அவருடைய பக்தியைக் கண்ணனே அல்லவா பாராட்டியிருக்கிறான்!' என்றெல்லாம் பட்டதிரி மனதிற்குள்ளாகவே நினைத்துக்கொண்டார். என்றாலும் பட்டதிரியின் துடுக்குத்தனமான பேச்சு அவரது ஞானம் பக்தி ஆகியவற்றை விடவும் மிஞ்சி நின்றது. தமக்காகப் பூந்தானம் காத்திருப்பது தெரிந்தும் தெரியாதவர் போல அவர், "என்ன பூந்தானம்? எப்படி இருக்கிறீர்கள்? என்னுடைய நாராயணீயப் பிரவசனத்தைக் கேட்க வந்தீர்கள் போலும். ஆனால் உங்களுக்கு எங்கே இப்படிப்பட்ட அரிய விஷயம் புரியப்போகிறது!" என்று குறும்புடன் கேட்டார்.

மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய பட்டதிரியே தம்மிடம் பேசியதும், பூந்தானம் நீண்ட நாட்களாகத் தமது உள்ளத்திலிருந்த ஆவலைப் பட்டதிரியிடம் தெரிவிக்க நினைத்து, "மகானுபாவரே! தங்களால் ஒரு காரியம் ஆக வேண்டும்" என்று பக்தியும் பணிவும் ததும்பக் கேட்டுக்கொண்டார்.

"என்ன வேண்டும் சொல்லுங்கள், பூந்தானம். என்னால் ஆனதைத் தாராளமாகச் செய்து தருகிறேன்" என்று உண்மையான அன்புணர்ச்சியுடன் பட்டதிரியும் கேட்டார்.

"பூஜ்யரே! உங்களிடம் ஒரு சந்தேகத்தை தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆவலாகும். எனது சந்தேகம் இதுதான்: இதயத்தில் கண்ணனின் திருவுருவம் பிரகாசிப்பதாகப் பாவித்து நான் பல

காலமாகவே தியானம் பழகி வருகிறேன். என்றாலும் தியானகாலத்தில் அவருடைய முழு உருவத்தையும் தியானிக்க இயலாமல் சிரமப்படுகிறேன். ஆகவே பகவானைச் சுலபமாகத் தியானிப்பதற்கு உரிய நல்ல ஒரு வழியைத் தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று பூந்தானம் ஆவலுடன் கேட்டார்.

இவ்விதம் பூந்தானம் அப்பாவித்தனமாகவும் வெளிப்படையாகவும் கேட்டது பட்டதிரிக்கு வேடிக்கையாக இருந்தது. அதனால் அவர் வித்யா கர்வத்துடன் விளையாட்டாக, ''ஸ்ரீகிருஷ்ண பரமாத் மாதாம் உங்களுக்கு மிகவும் வேண்டியவராயிற்றே! அவரை எருமைமாடு உருவத்தில்கூட நீங்கள் தியானிக்கலாமே!'' என்று சொல்லிக்கொண்டே சென்றுவிட்டார்.

பூந்தானத்திற்குப் பட்டதிரி விளையாட்டாகச் சொல்கிறார் என்பது புரியவில்லை. அப்பாவிப் பூந்தானம், பட்டதிரி சொன்னபடியே கண்ணனை எருமைமாடு வடிவத்தில் அன்று முதல் சிரத்தை யுடன் தியானிக்க ஆரம்பித்தார். மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே அவர் கண்ணனை எருமை மாடு வடிவத்தில் தரிசிக்கவும் செய்தார்.

2

ஒரு நாள் கோவில் உற்சவத்தின்போது உற்சவ மூர்த்தியை வெளியே எடுத்து வர முடியாமல் படியில் ஏதோ இடிப்பது போல இருந்தது. அர்ச்சகர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் உற்சவ மூர்த்தியை வெளியே கொண்டு வர முடியவில்லை. ஒருவரது கண்ணிற்கும் காரணம் எதுவும் புலப்படவுமில்லை. அப்போது பூந்தானம் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்தார். அவருக்கு, உற்சவமூர்த்தி மகிஷரூபமாகக் காட்சியளிப்பதும், மகிஷத்தின் கொம்பு தடுப்பதாலேயே மூர்த்தியை வெளியே எடுப்பதில் சிரமப்படுகிறார்கள் என்பதும் புரிந்து விட்டன. அவர் அர்ச்சகர்களிடம், ''வலது புறமாகச் சிறிது சாய்த்து எடுங்கள். அங்கேதான் கொம்பு இடிக்கிறது'' என்று சொன்னார். அர்ச்சகர்களுக்குப் பூந்தானம் சொன்னது புரியவில்லை. என்றாலும் அவர் சொன்னபடியே செய்து உற்சவரை ஒரு விதமாக வெளியே எடுத்தார்கள்.

அதே சமயம் உள்ளே கர்ப்பக்கிருகத்தில் அர்ச்சனை செய்துகொண்டிருந்த அர்ச்சகருக்குக் குருவாயூரப்பன் எருமைமாடு வடிவத்தில் காட்சி தந்து, ''எனது பக்தன் பூந்தானம் என்னை இந்த வடிவத்தில்தான் தியானம் செய்து வருகிறான்'' என்றார். அந்த அர்ச்சகர் மறுகணமே பூந்தானத்திடம் சென்று அவரது திருவடிகளைப் பணிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். அதன் பிறகுதான் ஏனைய அர்ச்சகர்களுக்கும் கூடியிருந்த மக்களுக்கும் 'கொம்பு இடிக்கிறது' என்று பூந்தானம் ஏன் சொன்னார்' என்ற விஷயம்விளங்கியது.

3

ஒரு நாள் பூந்தானம் கோவிலில் வழக்கமாக நடைபெறும் மாலைத் தீபாராதனையில் கலந்துகொண் டார். பிறகு அவர் கோவில் பிராகாரத்திலேயே அமர்ந்து சிரத்தையுடன் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்யலானார். ஆனால் போதுமான சம்ஸ்கிருத ஞானம் இல்லாததால் பதம் பிரித்துப் படிப்பதிலும் உச்சரிப்பதிலும் அவருக்குத் தவறு ஏற்பட்டது. அவர், ''பத்மநாபாய நம: மரப்ரவே நம:'' என்று அர்ச்சனை போலச் சொல்லிக்கொண்டிருந்த போது பட்டதிரி கோவிலை வலம் வந்துகொண்டிருந் தார். பட்டதிரிக்குப் பூந்தானம் பாராயணம் செய்த விதம் ஏளனத்தை உண்டுபண்ணியது. அவர் வித்யாகர்வம் தொனிக்க, கேலியாகச் சிரித்துக் கொண்டே, ''என்ன பூந்தானம்? பகவானை மரப்பு என்று சொல்கிறீர்களே. கண்ணன் என்ன மரத் தினால் ஆனவரா? அமரப்பு என்று சரியாகப் பாராயணம் செய்யுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பூந்தானத்திற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. 'எனக்குச் சம்ஸ்கிருத ஞானம் மிகவும் குறைவு என்ற விஷயம் பட்டதிரிக்குத் தெரிந்ததுதானே! எனது தவற்றை அன்புடன் சுட்டிக் காட்டி அவர் திருத்தி இருக்கலாமல்லவா? அதை விட்டுவிட்டு எப்போது பார்த்தாலும் இப்படிக் கிண்டல் செய்த படியே இருக்கிறாரே. உற்ற நண்பர் என்றால் தவறுகளைத் திருத்துவதுதானே கடமை?' என்று நினைத்த பூந்தானம் பாராயணம் செய்வதைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு வருத்தத்துடன் வீட்டிற்குத் திரும்பினார்.

அன்றிரவு பட்டதிரியின் கனவில் குருவாயூரப்பன் தோன்றி ''என்ன பட்டதிரி! வித்யாகர்வம் உன்னை இன்னும் விட்டபாடில்லையே! என் பூந்தானத்தை மேலும் மேலும் நீ இப்படி அவமானப்படுத்துகிறாயே. உனக்கே இது நன்றாக இருக்கிறதா? பூந்தானம் எப்படிப்பட்ட பக்தன்! அவன் இதயத்தில் நானே அல்லவா குடிகொண்டிருக்கிறேன்? அவன் சகஸ்ர நாமத்தை எப்படி உச்சரித்தால் உனக்கு என்ன

போயிற்று? அவன் உச்சரிப்பில் பிழை இருந்தால் அதை ஏன் நீ திருத்திச் சரியாகச் சொல்லித் தரக் கூடாது? மேலும் மரப்புரப்பு என்று சொல்வதிலும்தான் என்ன தவறு இருக்கிறது? காடுகளுக்கு அதி தேவதையாக நானே இருக்கிறேன் என்ற விஷயம் உனக்குத் தெரிந்ததுதானே?'' என்று கூறி மறைந்தார்.

பட்டதிரிக்கு உடனே தமது தவறு புரிந்தது. பக்தனுக்கும் பக்தபராதீனனுக்கும் மன வருத் தத்தை ஏற்படுத்தி அபராதம் செய்துவிட்டோமே என்று நினைந்து அழுது புலம்பினர். பிறகு அப் போதே இரவோடு இரவாக அன்றைய தினமே பூந்தானத்தின் வீட்டிற்கு ஓடினர். தம்முடைய விளையாட்டிற்காக உள்ளபடியே வருந்துவதாகவும் தம்மை மன்னிக்கும்படியும் மீண்டும் பூந்தானத் திடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார். ஆனால் நண்பரைக் கண்ட பூந்தானம் ஒன்றுமே நடவாத தைப் போல வருத்தம் நீங்கி மீண்டும் பழைய மன நிலையைப் பெற்றார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பட்டதிரி பூந்தானத் திற்குப் பாகவதம் படிக்கக் கற்றுக்கொடுத்தார். பாகவதம் படிக்கப் படிக்கப் பூந்தானம் கண்ண னின் சிந்தனையிலேயே அமிழ்ந்து போனர்.

4

பட்டதிரியும் பூந்தானமும் ஒருவரின் மீது ஒருவர் ஆழ்ந்த அன்புடன் பழகி வருவதைக் கண்ட சில பண்டிதர்கள் பொருமைப்பட்டார்கள். பட்டதிரியோ பெரும் பண்டிதர். ஆகவே அவரை அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. ஆகவே வாய்ப்பு ஏற்படும்போது பூந்தானத்தை அவமானப்படுத்தி மட்டம் தட்டத் தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து கொண்டு பூந்தானத்திடம், ''தயவுசெய்து தாங்கள் எங்களுக்குப் பாகவதம் படித்துச் சொல்ல வேண்டும்'' என்று உண்மையான ஆவலுடன் கேட்பது போல நடித்தார்கள். பூந்தானம் மிகவும் அப்பாவி. அந்தப் பண்டிதர்களின் சூழ்ச்சி ஒன்றும் அவருக்குத் தெரியாது. பண்டிதர்களின் நடிப்பை உண்மை என்று நினைத்த பூந்தானம் அவர்களின் கோரிக்கைக்கு இணங்கினர்.

பண்டிதர்கள் பூந்தானத்தைச் சுற்றி அமர்ந்து கொண்டார்கள். அவர் பாகவதம் சொல்ல ஆரம் பித்தவுடன், அவரது இலக்கணத்திலும் உச்சரிப்பி லும் உள்ள பிழைகளை அனைவருமாகச் சேர்ந்து எடுத்துக்காட்டி அவரை நன்றாக ஏளனம் செய்ய வேண்டும் என்பதே பண்டிதர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் பூந்தானம் படிக்க ஆரம்பித் தாரோ இல்லையோ, அனைவருமே தங்கள் எண்ணத்தை மறந்து மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட வர்கள் போல அவர் சொல்வதை மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பாகவதம் படிப்பதைப் பூந்தா னம் நிறுத்தினர். பண்டிதர்களுக்கு அப்போதுதான் உலக நினைவே வந்தது. குருவாயூரப்பனே பூந்தா னத்தின் வடிவத்தில் வந்து தங்களைச் சோதித்துக் கொண்டிருக்கிறர் என்ற எண்ணம் அனைவருக்கும் தோன்றியது. அனைவரும் பூந்தானத்தின் திருவடி களில் வீழ்ந்து பணிந்து, தாங்கள் செய்ய இருந்த தவற்றையும் சொல்லி அவரிடம் மீண்டும் மன் னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.

5

ஒவ்வொரு திங்கட்கிழமையும் குருவாயூர் சென்று குருவாயூரப்பனைத் தரிசிக்கப் பூந்தானம் முடிவு செய்தார்.

அதன்படி திங்கட்கிழமை காலையில் குருவாயூ ரப்பனைத் தரிசிக்கும் எண்ணத்துடன், ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை தமது இருப்பிடமாகிய அங்காடிபுரத்திலிருந்து பூந்தானம் குருவாயூருக்குப் புறப்பட்டார். விரைவில் குருவாயூரை அடையும் எண்ணத்துடன் குறுக்கு வழியாகிய காட்டுப்பகுதி யில் அவர் நடந்துகொண்டிருந்தார். அப்போது வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் மூன்று பேர் அவரை இடைமறித்துச் சூழ்ந்து கொண்டார்கள். பட்டதிரி அளித்திருந்த மோதிரத்தைப் பூந்தானம் விரலில் அணிந்திருந்தாரல்லவா? அதுவே இப்போது அவரை இந்த இக்கட்டான நிலைக்கு ஆளாக்கியது. திருடர்கள் தம்மைச் சூழ்ந்துகொண்டதைப் பூந்தா னம் பார்த்தார். மறுகணமே ஒருவன் அவரது கையை இறுக்கிப் பிடிக்க, மற்றொருவன் வாயை மூட, மூன்றாவது திருடன் அவரை அடிக்கவே ஆரம்பித்துவிட்டான்.

பூந்தானம் மோதிரத்தைத் திருடர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்றுதான் நினைத்தார். ஆனால் வாயில் துணி திணிக்கப்பட்டதாலும், கைகள் பின் புறமாகக் கட்டப்பட்டதாலும் அவரால் தமது கருத்தைத் திருடர்களுக்கு வெளிப்படுத்த இயல வில்லை. நடப்பது நடக்கட்டும் என்று அவர், 'ஆபத்பாந்தவா! கண்ணு! நீயே கதி. உன் விருப்பப்படியே ஆகட்டும்' என்று நினைத்துக் கொண்டே கண்ணனின் திருநாமத்தை மனதில்

ஜபிக்க ஆரம்பித்தார். இதற்குள்ளாகச் சற்றுத் தூரத்தில் சில குதிரைகள் வரும் காலடிச் சப்தமும் தீப்பந்தங்களின் வெளிச்சமும் வரத் தொடங்கின. உடனே மூன்று திருடர்களும் பூந்தானத்தைக் கட்டிப் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

குருவாயூர் அதிபதியான சாமுதிரி அவர்களின் திவானுகிய 'மாங்காட்டச்சன்'தாம் தமது சில வீரர்கள் சூழக் குதிரைமீது வந்துகொண்டிருந்தார். பூந்தானமும் மாங்காட்டச்சனும் ஒருவரை ஒருவர் ஏற்கனவே நன்கு அறிவார்கள். மாங்காட்டச்சனைக் கண்டதும் பூந்தானம் மகிழ்ச்சி அடைந்தார். கட்டப்பட்டிருந்த பூந்தானத்தைக் கண்டதும் மாங்காட்டச்சன் குதிரையை விட்டு இறங்கி ஓடோடிச் சென்று அவரை விடுவித்தார்.

பூந்தானம் மாங்காட்டச்சனிடம், "தக்க சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். குருவாயூரப்பன்தான் தங்களை அனுப்பி என்னைக் காப்பாற்றி யிருக்கிருன். எனது உயிரைக் காத்தருளிய தங்களுக்கு எந்தவிதத்தில் கைம்மாறு செய்வது என்று தெரியாமல் திகைக்கிறேன்" என்று நன்றியறிதலுடன் நாத் தழுதழுக்கக் கூறி ஆனந்தப் பட்டார்.

பூந்தானம் விரலில் அணிந்திருந்த மோதிரம் திவானின் கண்ணில் பட்டது. அவர் பூந்தானத்திடம், "உத்தமராகிய தங்களிடம் கைம்மாறு பெறுவது எனக்குப் பொருந்தாது. என்றாலும் தாங்கள் ஏதாவது கைம்மாறு செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவதால், நீங்கள் விரும்பினுல் உங்கள் மோதிரத்தை எனக்குத் தரலாம். அது எனக்குப் பிடித்தும் இருக்கிறது" என்ருர்.

பூந்தானம் செய்வதறியாது திகைத்தார். காரணம்: பட்டதிரியினுல் ஆழ்ந்த அன்பின் அடையாளமாக அளிக்கப்பட்ட மோதிரம் அல்லவா அது! "இந்த மோதிரம் நமது நட்பின் சின்னமாகத் தங்களிடமே இருக்கட்டும். ஸ்ரீகுருவாயூரப்பனே வந்து கேட்டால் அல்லாமல் கழற்ற வேண்டாம்' என்று சொல்லி அல்லவா பட்டதிரி பூந்தானத்திற்கு அந்த மோதிரத்தை அணிவித்திருந்தார்? பூந்தானம், 'குருவாயூரப்பா! தக்க சமயத்தில் என்னை வந்து காப்பாற்றிய திவானே மோதிரத்தைத் தரும்படி கேட்கும்போது, நான் எப்படி மறுக்க முடியும்? நான் இவருக்கு மோதிரத்தைத் தருவது பிழை யானுல், எனது குற்றத்தைக் கருணைகூர்ந்து மன்னித்துவிடு' என்று கண்ணனிடம் மனதாரப் பிரார்த்தித்துக் கொண்டே மோதிரத்தைக் கழற்றினுர். பிறகு திவானைச் சாட்சாத் குருவாயூரப் பனுகவே பாவித்து அவரிடம் மோதிரத்தைக் கொடுத்துவிட்டார்.

'மோதிரம் போனதனுல் பட்டதிரியின் நட்புமா போய்விடப் போகிறது? உள்ளத்தில் ஏற்பட்ட நட்பிற்கு இது போன்ற வெளிப் பொருள்களினுல் எல்லைகட்ட முடியாது' என்பது போலப் பூந்தானம் தமக்குத் தாமே சொல்லி ஒருவாறு ஆறுதல் பெற முயன்ருர்.

திவான், பூந்தானத்திற்குப் பாதுகாப்பாகக் குருவாயூர் எல்லை வரையிலும் உடன் வந்தார். பிறகு பூந்தானம் கோவிலுக்கும் திவான் தமது இருப்பிடத்திற்குமாகப் பிரிந்து சென்ருர்கள்.

அன்றிரவு கோவில் அர்ச்சகரின் கனவில் ஸ்ரீகுருவாயூரப்பன் தோன்றி, "நாளைக் காலையில் கர்ப்பக்கிருகத்திலுள்ள என் விக்கிரகத்தின் நிர்மால்யத்தைக் களையும்போது கவனமாகக் களையுங்கள். ஏனென்ருல் என் பாதத்தில் ஒரு தங்க மோதிரம் இருக்கும். அதை எனக்குப் பூந்தானம் பரிசாகக் கொடுத்திருந்தார். நாளைக் காலையில் அதை அவரிடமே கொடுத்துவிடுங்கள்" என்று கூறி மறைந்தார்.

மறுநாள் விடியற்காலையில் பொழுது விடிந்ததோ-இல்லையோ அர்ச்சகர் கோவிலுக்கு விரைந்து சென்ருர். கனவில் தமக்குச் சொல்லப்பட்டதைப் போன்ற ஒரு தங்க மோதிரம், சந்நிதியில் பெருமானின் திருவடியில் இருப்பதைக் கண்டார். மோதிரத்துடன் மேளதாளங்களுடன் அந்த அர்ச்சகர் பூந்தானத்தை எதிர்கொண்டு அழைக்கத் தாமே புறப்பட்டுச் சென்ருர். கோவில்குளத்தில் நீராடிவிட்டுக் கரையேறிக்கொண்டிருந்தார் பூந்தானம். பக்தர்கள் புடைசூழச் சென்ற அர்ச்சகர் பூந்தானத்தைப் பணிந்து கனவைப்பற்றித் தெரிவித்தார். திவானின் உருவத்தில் ஸ்ரீகுருவாயூரப்பனே வந்து லீலை புரிந்ததை எண்ணி வியந்த பூந்தானம் ஆனந்தத்தால் கண்ணீர் மல்கினுர்.

இவ்விதம் பலவேறு சந்தர்ப்பங்களில் பூந்தானத்தின் வாழ்க்கையில் ஸ்ரீகுருவாயூரப்பன் தரிசனம் தந்து, தான் உண்மையான பக்தர்களின் பிரியனுக விளங்குவதைக் காட்டியருளினுன். ★

திரியும் பாம்பு

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்



காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வினவுவது போல் பல பாடல்களைப் பாடியுள்ளார். சென்ற பாட்டில், "நின் முடிமேல் உள்ள சந்திரன் பகலிலும் கதிரவனைப் போல ஒளிவிடுமோ?" என்று கேட்டவர், அந்தத் திங்களைப்பற்றிய எண்ணத்தைத் தொடர்ந்து மேலும் சிலவற்றை எண்ணுகிறார். இறைவனுடைய திருமுடியில் சந்திரனோடு பாம்பும் இருக்கிறது. அந்தத் திருமுடி செஞ்சடை செறிந்தது. அந்தச் சிவப்பையும் சந்திரனையும் சேர்ந்து பார்த்தால் அந்தியிலே தோன்றும் செவ்வானமும் அதில் தோன்றும் திங்களும் போலக் காட்சி அளிக்கின்றன. சடையும் திங்களும் சேர்ந்த சேர்க்கை இப்படிப் பொருத்தமாக உவமை கூறும்படி இருக்கிறது. ஆனால் அங்கே பாம்பும் இருக்கிறது. சிவபெருமான் திருமார்பிலும் திருமுடியிலும் பாம்புகளையே அணிகலன்களாக அணிந்திருக்கிறான். செக்கர் வானத்தில் பாம்புக்கு என்ன வேலை? உவமையை விரித்துப் பார்க்க வழி உண்டா?

ஓ! பாம்புக்கு ஒரு தொடர்பு உண்டு. சந்திரனை விழுங்குவது ராகு கேதுக்களாகிய பாம்புகளே அல்லவா? எனவே பாம்பு மெல்ல மெல்ல இறைவன் சடாபாரத்திலே ஊர்ந்து வருவதற்கு ஒரு காரணத்தைக் கற்பனை செய்ய முடியும் என்று தெரிகிறது.

பாம்பு சட்டென்று சந்திரனைப் பற்றிக்கொள்ளவில்லை. அது அங்கும் இங்கும் திரிந்து நாக்கை நீட்டுகிறது. சந்திரன் இருக்குமிடம் தெரியாமல் தேடுகிறதோ? சடைக்காட்டில் அது நுழைந்து நுழைந்து வரும்போது அப்படித்தான் தோன்றுகிறது.

சந்திரனைத் தேடிச் செல்லும் பாம்புக்கு அது தட்டுப்படாதா? இரவிலே சந்திரன் ஒளியை அது நன்றாகக் காணலாம். பகலிலே சூரியனுக்கு முன் ஒளியிழந்து தோன்றும். செவ்வானம் தோன்றும் போது எதிரே நிலாவின் ஒளி நன்றாகத் தோன்றாது. பகல்நேரத்திலும் அது பளிச்சென்று தெரியாது. இந்தப் பாம்பு காலைநேரத்தில் சந்திரனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாமல் தவிப்பது போலத் தவிக்கிறதோ?

இப்படியெல்லாம் அம்மையாரின் மனம் கற்பனைக் குதிரையின்மேல் ஏறி வையாளி நடை போடுகிறது.

இறைவன் திருமுடி அந்திச் செவ்வானமே போல் செந்நிறமாகத் தோன்றுகிறது. அவன் செஞ்சடையப்பன் அல்லவா? அந்தத் திருமுடியில் நிலா இருக்கிறது.

> நிலா இருந்த
> செக்கர்அவ் வானமே ஒக்கும்
> திருமுடிக்கே

அந்தத் திருமுடிக்குள் பாம்பு புகுந்து புகுந்து வெளிப்படுகிறது. எதையோ தேடுவது போல அது திரிந்துகொண்டிருக்கிறது. அந்த அரவம் திருமுடிக்குளே புகுந்து உலாவி உழிதருகிறது.

திருவடிக்கே புக்கு...உலாவி உழிதரும்.

காட்டுக்குள் புகுந்து தேடுவது போலத் தேடுகின்றதே! எதைத் தேடுகின்றது? நிலாவோடு விளங்கும் வெண்மதியைத் தேடி அதைத் தனக்கு உணவாகக் கொள்ளும்பொருட்டு அது உலவுகிறதோ? இருட்டிலே சந்திரனைத் தேட வேண்டிய அவசியமே இல்லை. அதன் ஒளி எங்கும் பரவியிருக்கும். ஆனால் பகலில் அவ்வளவு தெளிவாகச் சந்திரன் தெரியாது. காலையில் சந்திரனைத் தேடுவது போல அல்லவா இந்தப் பாம்பு உலாவித் திரிகிறது?

விரிவான வானத்தில் பகல்நேரத்தில் எங்கேயோ மங்கித் தோன்றும் சந்திரனைத் தேடிப் பிடிக்க உலாவித் திரிவது போல இந்தப் பாம்பு திரிகிறதா?— இப்படிக் கேட்கிறார் காரைக்கால் அம்மையார்.

> நிலாஇலங்கு வெண்மதியை
> நேடிக்கொள் வான்போல்
> உலாவி உழிதருமா
> கொல்லோ?—நிலாஇருந்த
> செக்கர்அவ் வானமே
> ஒக்கும் திருமுடிக்கே
> ஒப்புக்கு அரவம் காலையே போன்று.


[பாம்பானது நிலா இருந்த அந்தச் சிவப்பான அந்திவானத்தை ஒத்து விளங்கும் சிவபெருமானுடைய அழகிய முடியிலே புகுந்து, நிலா விளங்குகின்ற வெண்ணிறமுள்ள சந்திரனைக் காலை நேரத்தில் தேடுவதைப் போன்று, அதைத் தேடிப் பற்றிக் கொள்வதைப் போல உலவித் திரியும் வண்ணமோ?

நேடி—தேடி. கொள்வான்போல் — கொள்வது போல; கொள்வான்—கொள்ளுதல்; தொழிற்பெயர். உழிதருமா கொல்லோ—உழிதருமாறோ? உழிதருதல்—திரிதல். இந்தக் காட்சி என்ற எழுவாயை இசையெச்சத்தால் வருவித்து முடிக்க வேண்டும். செக்கர்—செந்நிறம்; செக்கரை உடைய அந்த அந்திவானம். திருமுடிக்கே—திருமுடியில்; உருபு மயக்கம். அரவம்: எழுவாய். காலையே போன்றும் உழிதருமா கொல்லோ?]

பாம்பு சடாமுடியின் மேலும் கீழும் புகுந்து வெளிப்பட்டுத் திரிவதற்கு ஒரு காரணம் கற்பிப்பவரைப் போல இந்தப் பாடலைப் பாடியுள்ளார் அம்மையார்.

இது அற்புதத் திருவந்தாதியில் வரும் 64-ஆம் பாடல். ★

வித்யாசாகரரின் பக்தி



1884—ஆம் ஆண்டில் ஈசுவரசந்திர வித்தியாசாகரர் கல்கத்தாவில் போர்ட் வில்லியம் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். ஒரு நாள் அவருடைய தாயாரிடமிருந்து கடிதம் வந்தது. அதில் அவருடைய இளைய சகோதரர் சாபுசந்திரருக்கு மறுநாள் திருமணம் என்றும், அதற்கு அவர்வரவை எதிர்பார்ப்பதாகவும் கண்டிருந்தது. உடனே வித்யாசாகரர் தமக்கு அனுமதி தரும்படி கல்லூரி முதல்வரிடம் கூறினார். ஆனால் அனுமதி கிடைப்பது சிரமமாக இருந்தது. மறுநாளும் முயன்றார். முதல்வரிடம் சென்று தம்முடைய அன்னைக்கு அதிருப்தியை உண்டாக்குவதைக்காட்டிலும், தமது பதவியைத் துறப்பதே மேல் என்று கூறினார். வித்யாசாகரரின் தாயன்பை நன்கு அறிந்த முதல்வர், வேறு வழியின்றி அனுமதி கொடுத்தார். வித்யாசாகரர் ஒரு கணமும் தாமதியாமல் தமது ஊரை நோக்கிக் கால்நடையாகப் புறப்பட்டார். கல்கத்தாவிலிருந்து அவர் ஊர் ஐம்பது மைல். வழியில் நல்ல மழை பெய்தது புயல் வீசிற்று. இரவுநேரம் வந்ததும் வித்யாசாகரர் மேலே செல்ல இயலாமல் ஒரு சத்திரத்தில் தங்கினார்.

அதிகாலையில் மீண்டும் பயணமானார். சிறிது தூரம் சென்றதும் தாமோதர் நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதைக் கண்டார். தண்ணீரின் வேகம் அதிகம். அந்நாளில் பாலம் இல்லை. ஒன்றிரண்டு படகுகளும் மறுகரையில் இருந்தன. ஒரு விநாடியும் யோசிக்காமல் ஆற்றில் குதித்துநீந்தி அக்கரை சேர்ந்தார். சிறிது தூரம் சென்றதும், மற்றோர் ஆறு குறுக்கிட்டது. கஷ்டத்தோடு நீந்தி, அதனையும் கடந்தார். சூரியன் மறையும் நேரம். காலையிலிருந்து ஓர் ஆகாரம்கூட உண்ணவில்லை. ஊரை அடைய இன்னும் சில மைல் தூரம். களைப்பைப் பொருட்படுத்தாமல் நடந்து திருமணநாளில் இரவு 9 மணிக்கு வீடு சேர்ந்தார்.

மகனைக் காணாததால் அழுதுகொண்டு பட்டினியாய் இருந்த பகவதிதேவி மகனைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவள் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. வார்த்தைகளைக்காட்டிலும் அந்தக் கண்ணீர்த் துளிகளே பேசின. தாம் சாகும் வரையில் அன்னையிடம் பக்தி காட்டினார் வித்யாசாகரர். அவர் வாழ்க்கையில் மகுடம் போன்றது அன்னையிடம் அவர் கொண்ட பக்தியேயாகும்.

—ஏ. என். ராய்

நன்றி: பண்பு

கல்வியும் சமுதாயமும்

சுவாமி விவேகானந்தர்

1

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.

தலைமுறை தலைமுறையாக நிலவிய, வெளியே ஓடும் மனதைத் தடுத்து நிறுத்திய கல்விமுறை இப்போது கிட்டத்தட்ட அழிக்கப்பட்டுவிட்டது. இதுவா கல்விமுறை?

இத்தகைய கல்விமுறையின் ஆதிக்கத்தின் விளைவாகப் பழங் கருத்துக்கள்கூட ஒவ்வொன்றாக மறைந்துகொண்டே வருகின்றன. புதிய கருத்துக்கள் பயன்படாமல் போனது பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை.

மனிதனை மெல்ல மெல்ல இயந்திரமாக்கிக் கொண்டு வருவதும் ஒரு கல்வியா? அந்த இயந்திரமே எவ்வளவோ பாக்கியம் செய்தது. ஓர் இயந்திரத்தைப் போல நல்லவனாக இருப்பதை விடவும், ஒருவன் தன்னுடைய சுதந்திர மனப் பான்மையாலும் அறிவாலும் உந்தப்பட்டுத் தவறு செய்வதே மேல்—என்பது என்னுடைய கருத்து.

2

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மசரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப் படுகின்றன.

எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது என்று வேதாந்தம் சொல்கிறது. இந்த அறிவு ஒரு சிறுவனிடம்கூட இருக்கிறது. இந்த அறிவை விழித்து எழும்படி செய்வதுதான் ஆசிரியனுடைய வேலையாகும்.

மதம்தான் எல்லாவற்றிற்கும் உயிர்நாடி. சமய வாழ்க்கை சோறு போன்றது. மற்றவை எல்லாமே கறி, கூட்டுப் போன்றவை. கறி, கூட்டு வகைகளை மட்டும் உண்பதால் அஜீர்ணம் ஏற்படுகிறது. அப்படியே சோற்றை மட்டுமே சாப்பிட்டாலும் அஜீர்ணம் ஏற்படும்.

3

பிரம்மசரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும். அத்தகையவன் ஒரே ஒரு முறை, தான் கேட்டதையும் அறிவதையும் மறவாமல் நினைவில் வைத்துக்கொள்கிறான். இப்படிப்பட்ட பிரம்மசரியம் நம் நாட்டில் இல்லாமற் போனதால்தான், எல்லாமே இன்று அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன.

குருகுல முறையில் ஆசிரியனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவதுதான் சிறந்த கல்விமுறை என்பது எனது கருத்து. ஆசிரியரின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமையாமல் எந்தவிதக் கல்வியையும் பெற முடியாது.

உங்கள் பல்கலைக் கழகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கடந்த ஐம்பதாண்டுகளாக அவை இருந்து என்ன சாதித்திருக்கின்றன? (1897ஆம் ஆண்டில் சென்னைச் சொற்பொழிவு ஒன்றில் விவேகானந்தர் குறிப்பிட்டது) சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனையும் அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. அவை வெறும் தேர்வுகளை நடத்தும் நிறுவனங்களாக மட்டும்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காகத் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நமது நாட்டில் இன்னும் வளராமலேயே இருக்கிறது.

4

பழைய சமுதாயமானாலும் புதிய சமுதாயமானாலும் உண்மை எதற்கும் தலைவணங்காது. சமுதாயம்தான் உண்மைக்குத் தலைவணங்க வேண்டும் அல்லது அழிய வேண்டும். உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் சமுதாயங்களை உருவாக்க வேண்டும். சமுதாயத்திற்கு ஏற்றாற்போல உண்மை தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளக் கூடாது.

எங்கு உயர்ந்த உண்மைகள் நடைமுறையில் இருக்கின்றனவோ, அந்தச் சமுதாயம்தான் சிறந்தது. இதுவே என்னுடைய கருத்து.

சமுதாயம் உயர்ந்த உண்மைகளுக்குத் தகுதி உடையதாக இல்லாவிட்டால், அதைத் தகுதி உடையதாகச் செய். எவ்வளவு விரைவில் இதைச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு நன்மை ஏற்படும்.



5

மக்களின் தளைகளை நீக்கி உன்னால் இயன்ற அளவுக்கு அவர்களை விடுதலை பெறச் செய். இன்பங்கள் என்ற உன்னுடைய எல்லா ஆசைகளையும் சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டு எப்போது உன்னால் தியாகம் செய்ய முடிகிறதோ, அப்போது நீ ஒரு புத்தர் ஆகிவிடுவாய். அப்போது நீ ஒரு முக்தன் ஆவாய்.

6

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு மூன்று விஷயங்கள் அவசியம்.

1. நன்மை தரக்கூடிய சக்திகளில் உறுதியான நம்பிக்கை.

2. பொறாமையும் சந்தேகமும் இல்லாமலிருத்தல்.

3. நல்லவர்களாக இருக்கவும் நன்மையைச் செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவி புரிதல்.

7

உன்னுடைய இலட்சியம் ஜடப்பொருள் என்றால் ஜடப் பொருளாகவே நீ ஆகிவிடுவாய். கவனித்துப் பார். ஆன்மாவை அடைவதுதான் நம்முடைய இலட்சியம். அது ஒன்றே ஒன்றுதான் எப்போதும் இருந்து வருகிறது. ஆன்மாவைத் தவிர வேறொன்றும் இல்லை. அதைப் போலவே நாமும் என்றென்றும் வாழ்ந்திருப்போம்.

8

இந்து மதத்தைச் சேர்ந்தவன் குடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான், நடப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான், திருமணம் செய்து கொள்வதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான், கொள்ளையடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித் தான்.

ஒவ்வொரு நாடும் உலகிற்கு ஆற்ற வேண்டிய பணி ஒன்று உண்டு. அந்தப் பணிக்குத் தீங்கு நேராத வரையில் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அந்த நாடு நிலைத்து வாழும். ஆனால் அந்தப் பணிக்கு அழிவு வந்தவுடனே அந்த நாடு சிதைந்துவிடுகிறது.

9

கற்புநிலையிலிருந்து வழுவதுதான் ஒரு நாட்டின் அழிவிற்கு முதல் அறிகுறி என்பதை வரலாற்றில் நீ பார்க்கவில்லையா? கற்புத் தவறுதல் என்ற கேடு சமுதாயத்தில் நுழையும்போது, அந்த இனத்திற்கு முடிவுக் காலம் நெருங்குவது தெளிவாகிவிடுகிறது.

10

இப்போது நாம் விலங்குகளைவிட அதிக அளவில் ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயத்தின் கட்டுப்பாடு என்னும் சாட்டையடிகளால்தான் நாம் அமுத்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறோம். இன்று சமூகம், 'நீ திருடினால் நான் உன்னைத் தண்டிக்கப் போவதில்லை' என்று சொல்லிவிடுமானால், உடனே நாம் விரைந்து ஒருவர் மற்றொருவருடைய சொத்துக்களைப் பறிப்பதற்காகப்பாய்ந்து ஓடுவோம். போலீஸ்காரர்கள்தாம் நம்மை நல்ல ஒழுக்கம் உடையவர்களாக வைத்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பொது அபிப்பிராயம்தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது. உண்மையில் மிருகங்களைவிட நாம் சிறிதும் உயர்ந்தவர்களாக இல்லை.

11

சமுதாயத்தில் காணப்படும் பெரும்பாலான மதப் பிரிவுகள் தாற்காலிகமானவையாகும். நீர்க்குமிழிகளைப் போலச் சிறிது காலம் இருந்து அவை மறைந்துவிடும். ஏனென்றால் அதன் தலைவர்கள் பொதுவாகச் சிறந்த ஒழுக்கம் இல்லாதவர்களாக இருப்பதுதான் இதற்குக் காரணம். பரிபூரணமான அன்பு, தீங்கிழைத்தவர்களுக்கும் பதிலுக்குத் தீங்கு நினைக்காத இதயம்—ஆகிய இவைதாம் சிறந்த

ஒழுக்கத்தை உருவாக்குகின்றன. தலைவரிடம் சிறந்த ஒழுக்கம் இல்லாவிட்டால், அவரிடம் நம்பிக்கை வைப்பதற்கு வாய்ப்பில்லை. தலைவர் தூய்மையுடையவராக இருக்கும்போது, உறுதியான நிலைத்த நம்பிக்கையும் பற்றும் ஏற்படுகின்றன.

ஒரு கொள்கையை எடுத்துக் கொள். அதற்காகவே உன்னை அர்ப்பணித்துப் பொறுமையுடன் போராடிக்கொண்டிரு. உனக்கு ஆதரவான ஒரு காலம் வரும்.

12

'உங்களுடைய சமயத்தால் (Religion) சமுதாயத்துக்கு என்ன நன்மை?' என்று நம்மைக் கேட்கிறார்கள். இவ்விதம் கேட்பதால் உண்மையின் சோதனைக்களனாகச் சமுதாயம் ஆகிறது. இது தர்க்கத்திற்கு மிகவும் முரண்படுகிறது.

சமுதாயம் என்பது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு நிலை. அதில் நாம் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். சமுதாயம் மாறாமல் ஒரு நிலையிலேயே எப்போதும் நிரந்தரமாக இருப்பதாக இருந்தால் அது, குழந்தை என்றென்றைக்கும் குழந்தையாகவே இருப்பதைப் போன்றதாகும்.

முழுவளர்ச்சி அடைந்த மனிதனாகிய குழந்தை என்ற ஒரு நிலை இருக்க முடியாது. மனிதன், குழந்தை என்ற இரண்டு சொற்களுமே ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. எனவே பரிபூரண நிலையை அடைந்த சமுதாயம் என்று ஒன்று இருப்பதற்கில்லை. சமுதாயத்தின் இத்தகைய ஆரம்ப நிலைகளிலிருந்து மனிதன் வளர்ச்சி அடைய வேண்டும். அவன் வளர்ச்சியும் அடைவான்... "உனக்குள் இருக்கும் தாமரையை நீ ஏன் மலரும்படிச் செய்யக்கூடாது? அப்படிச் செய்தால் தேனீக்கள் அங்கே தாமாக வந்து சேரும்" என்று என்னுடைய குருநாதர் சொல்வது வழக்கம்.

13

மற்றவர்களிடம் தீய தன்மை இருப்பதாக நீ உணராதே. தீய தன்மை பலவீனத்தாலும் அறியாமையாலும் ஏற்படுகிறது. மக்களிடம் அவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வதால் என்ன நன்மை ஏற்படப் போகிறது? குறை கூறுவதாலும் அழிவு முறையாலும் எந்த விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. இவற்றை விட உயர்ந்தது எதையாகிலும் அவர்களுக்கு நாம் தர வேண்டும். அவர்களுடைய பெருமைக்கு உரிய இயல்பை, அவர்களுடைய பிறப்புரிமையை அவர்களிடம் எடுத்துச் சொல்.

14

நான் 'சீர்திருத்தம்' என்று சொல்லவில்லை. மாறாக 'முன்னேறிச் செல்' என்று சொல்கிறேன். இப்போது சீர்திருத்தம் செய்ய வேண்டிய அளவுக்கு எதுவும் கெட்டுவிடவில்லை.

சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கையை அனுசரித்து அமைத்துக் கொள்வதுதான், வெற்றிகரமான வாழ்க்கைக்கு உரிய முழு ரகசியமாகும். இந்த உண்மை, வாழ்க்கை மலர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாக இருந்து பெரிதும் துணைபுரிகிறது. மாற்றியமைத்துக் கொள்வதும், அனுசரித்துப் போவதும் அடக்கி அழுத்தி வைக்க முயற்சி செய்யும் புறச் சக்திகளை எதிர்த்துப் போராடுவதன் விளைவாகத் தோன்றுகின்றன. சூழ்நிலைக்கேற்பத் தன்னை நன்றாக அனுசரித்து அமைத்துக்கொள்பவன், நீண்ட காலம் வளமான வாழ்க்கை வாழ்கிறான். நான் இதை எடுத்துச் சொல்லாவிட்டாலும் சமுதாயம் மாறியபடிதான் இருக்கிறது. அப்படியே சமுதாயம் மாறித்தான் ஆகவேண்டும்.

15

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை. வளர்ச்சியடைவதுதான் வாழ்க்கை அதாவது விரிவடைதல். அதுதான் அன்பாகும். எனவே அன்புதான் வாழ்க்கை ஆகும். அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஒரே நியதியாகும்.

எல்லாவிதமான சுயநலமும் மரணம்தான். இந்த உண்மை இம்மை மறுமையாகிய இரண்டு உலகங்களுக்கும் பொருந்தும் நன்மை செய்துகொண்டிருப்பதுதான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமலிருப்பதுதான் மரணம். இப்போது நாம் பார்க்கிற மக்களில் தொண்ணூறு சதவீதம் இறந்து போனவர்கள். அவர்கள் பிசாசுகள்தாம். எனது அருமைக் குழந்தைகளே, அன்பு செலுத்துபவர்களைத் தவிர வேறு யாரையும் வாழ்வதாகக் கருத முடியாது. ★

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

1979 ஜுலை மாத நிகழ்ச்சிகள்

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஜயந்தி விழா :

21-7-79 சனி ஜன்மதிதி : விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன (காலை 5 மணி முதல் 11-20 மணி வரை)

22-7-79 ஞாயிறு **சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஜயந்தி பொதுக்கூட்டம்**

மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
பேசுபவர் : திரு கே. ஆர். வாசுதேவன்

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை

4 மணி முதல் 4-30 மணி வரை
1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (8-7-79 & 29-7-79)
2. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (1-7-79 & 15-7-79)

மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சொற்பொழிவு (தமிழ்)

1-7-79 — 1. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்**—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்

8-7-79 & 29-7-79 — 2. **ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்** - திரு வி. எஸ். வி. குருசுவாமி சாஸ்திரிகள்

15-7-79 — 3. இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்

மாலை 5-35 மணி முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் அவர்கள் **ஸ்ரீமத்** பகவத்கீதை என்னும் தலைப்பில் ஜுலை 1, 8, 15, 29 ஆகிய தேதிகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-45 மணிக்கு)

1. திங்கள் — **ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்**—சுவாமி அமிர்தானந்தர்
2. செவ்வாய் — நாரத பக்தி சூத்திரம் — சுவாமி கபீரானந்தர்
3. புதன் — கட உபநிஷதம் — சுவாமி அமலாத்மானந்தர்
4. வியாழன் — மகாபாரதம் — திரு 'அண்ணு' சுப்பிரமணியம்
5. வெள்ளி — **ஸ்ரீமத் பகவத்கீதை** — சுவாமி தன்மயானந்தர்

சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

14-7-79 — இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்
7-7-79 & 28-7-79 — பஜனை

விசேஷ தினங்கள் :

15-7-79 ஞாயிறு : அந்தர்யோகம் (சாதனை தினம்)
9-7-79 திங்கள் : குருபூர்ணிமா

6-7-79 & 19-7-79 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு **ஸ்ரீ**ராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

28-7-79 சனி மாலை வழிபாட்டிற்குப் பிறகு **ஸ்ரீ** சியாம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

மடத்தைச் சேர்ந்த சாதுக்களால் சென்னை நகரத்தில் நடத்தப்பெறும் வேறு சில நிகழ்ச்சிகள்:

8-7-79 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு **ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்** — சுவாமி கீர்த்திதானந்தர்
இடம் : 7, கெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்

மாலை 6-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் 6, 15, 20, 27 ஆகிய தேதிகளில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம் : இல. 18, 9-வது லேன், சாஸ்திரி நகர்

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை - 600 004

காந்தியடிகளின் பொன்மொழிகள்

❊ கடவுள் வரையறைகளுக்கு அடங்காதவர். நாம் அவரை உணருகிறோமே ஒழிய அறியவில்லை.

❊ உங்கள் இச்சைகள் உங்களை வெற்றி கொண்டுவிடும் போலத் தோன்றினால், முழந்தாளிட்டு ஆண்டவனின் உதவியைக் கோரிப் பிரார்த்தனை செய்வீர்களாக.

❊ பிரார்த்தனையானது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின்போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களிலில்லாத இதயம் படைத்திருப்பது மேலானது.

❊ பிரார்த்தனை மதத்தின் ஆத்மாவாகவும் சாரமாகவும் விளங்குகிறது என்று நான் நம்புகிறேன். அதனால் பிரார்த்தனை மனித வாழ்க்கையின் ஆதாரமாக விளங்க வேண்டும். பிரார்த்தனையின் மாய சக்தியை அனுபவித்தவன் நாட்கணக்கில் சாப்பாடில்லாமல் இருக்க முடியும். ஆனால் பிரார்த்தனையில்லாமல் ஒரு நிமிடம்கூட இருக்க இயலாது. பிரார்த்தனையின்றி மன நிம்மதியில்லை.



பொன்மொழிகள்

❊ நாம் கடவுளுக்காகவும், அவருடைய திட்டங்களையும் நிறைவேற்றி வைப்பதற்காகவும் பாடுபடுகிறோம். மரணம் என்பது தோற்றத்தோடு சரி. மரணமும் அழிவும் மாறுதல்களே தவிர வேறல்ல. ஓர் ஓவியன் இன்னும் நன்றாக வரைய வேண்டும் என்பதற்காக ஏற்கனவே தான் வரைந்த ஓவியத்தை அழித்து விடுகிறான். கடிகாரம் செய்பவன் நல்ல ஸ்பிரிங் போடுவதற்காக மோசமான ஸ்பிரிங்கைத் தூர எறிந்து விடுகிறான்.